ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

அழகியமணவாளதாசனென்கிற

திவ்வியகவிப்பிள்ளைப்பெருமாள்

ஐயங்கார்அருளிச்செய்த

திருவரங்கத்தந்தாதிமூலமும்

திரிசிரபுரம்-மஹாவித்வஜ்ஜன சேகரராகிய

வி-கோவிந்தபிள்ளையவர்கள்

முன்னிலையில்

ம-௱-௱-ஸ்ரீ. ரிஜிஷ்டர்.

கிருஷ்ணசாமிமுதலியாரவர்கள்

குமாரர்

நம்மாழ்வார்தாசரவர்களால்

செய்த பிரதிபதமும்,

முன்பதிப்பித்தபிரதிக்கிணங்கப்

பரிசோதித்து

புரசைப்பாக்கம்

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்கஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பவ ௵.

1874

அறிவிக்கை.

இந்நூலுட் பிரயோகஞ்செய்த குறிகளும் அவற்றின் பொருள்களும்

—.	இயற்சொல்லாதலின் பிரதிபதம்கூறுதொழிந்திருக்கின்றது.
( )	வருவித்த சொல்லும் சொற்களும்
, ❊	ஒருபொருட்பல்கிளவி.
❊ ❊	ஒருசொற்பல்பொருள்.

முகவுரை.

நிலமண்டிலவாசிரியப்பா.

திருமலருந்தித் திசைமுகனளிப்ப
வருமலர்தலைய வையகத்துற்ற
கடியார்துளவக் கவின்றேளரங்கன்
அடியார்க்கடியார்க் கடியார்க்கடியேன்
வந்தனந்தந்துரை வாய்மையைப்புலவீர்
உந்தநற்செவியுற வுவப்புடன்கேண்மின்
அந்தமினுன்மறை யாழ்வார்பதின்மர்
செந்தமிழாகச் செய்யவுமஃது
நாலாயிரமா னனியோர்சிறிய
நூலாயிருப்ப நுவன்றிடப்புக்கு
துக்கமின்மாற்குத் துணைவியரெட்டே
தக்கநற்குணங்க டந்தொகையெட்டே
அருமங்கையர்முத லாம்போகமெட்டே
திருமந்திரத்துட் டிகழெழுத்தெட்டே
ஆயிருப்பதலா லவுன்தனையற்கும்
மேயிருங்கண்களு மெட்டாயிருத்தலின்
எட்டுக்குறியவ னெம்பிரானென்றே
கட்டுறுதந்நூற் கணக்குமஃதாகெனுத்
திருவாய்மலர்ந்து தேயாவிசையுறு
மருவாய்மலர்த்தார் மாமணவாள
தாசருகந்தரு டன்மையுற்றியார்க்கும்
பேசருமட்டப் பிரபந்தத்துள்
நந்தாதியங்கு நற்றிருவரங்கத்
தந்தாதியதற் கழகார்பிரதிபதம்
பொன்னசலந்தனைப் புரட்டுவல்யானெனுத்
துன்னசவலினே தோமுடையேனும்
வளாவானிசைந்து வளம்பெறுபதங்கட்
குளாவானிலக்கியத் துற்றுணர்ந்தனவும்

முகவுரை.

தண்டமிழ்வேதந் தன்னிலுமிந்த
வண்டமிழ்நூலினு மற்றவையெழினும்
திசழும்பதங்களை நேர்படத்தொடுத்துத்
இகழுமியற்சொல் செப்பும்பொருள்கள்
புலன்படதிற்றலிற் புகலாதொழித்துப்
பலன்றருபண்புறு பாக்களுட்பட்ட
தெரிவரியனவை தெளிவுறக்கேட்டு
வரிவரிதோறும் வண்டளைபிரித்துப்
போதவர்திரிசிர புரந்தனிலிழைத்த
மாதவத்தாங்கு வந்தவதரித்தோன்
பொற்பாகவரி புணையடியேத்தும்
நற்பாகவத னுவலர்தலைவன்
இங்கைந்திலக்கண மிலக்கியந்தன்னுளுஞ்
சங்கைகடீர்ந்தோன் சதுரகோவிந்தன்
என்னும்பெயரின னிடங்கொண்டிதனுள்
துன்னுங்குறைகளைத் துடைத்திடச்செய்தே
பதித்தனனடியேன் பாழ்மனக்கவலையின்
கதித்தநவைகளுங் கல்லாக்குறைகளும்
அச்சாசிரிய ராற்றுமநந்த
நச்சாசிரிக்க நற்றிறமின்மையும்
அக்கரஞ்சொற்பொரு ளார்புரைகளைந்து
சிக்கறச்செய்கிலாத் தீமையுமற்றும்
எல்லாங்கமித்தடி யேற்கருள்புரிந்தென்
பொல்லாங்கறுத்துப் புணரியங்கணத்தின்
இழிநீர்தனையு மேற்குங்கடன்மையின்
கழிநீரோதுங் கற்றிலேனுரையும்
வரைமினென்பதுவே வரையென்விண்ணப்பம்
குரைகடல்சூழ்தரும் குவலயந்தனிலே.

முகவுரை-முற்றிற்று.

இங்ஙனம்
நம்மாழ்வார்தாசன்.

ஸ்ரீபராங்குசதிவாகராயநம:

திருவரங்கத்தந்தாதிப் பிரதிபதம்.

தனியன்.

மணவா ளரவிந்த மார்நோக் கவிம்மை மறுமையின்மா
மணவா ளர்தம்பதம் வாய்த்திடுங் கோயிலில் வந்தவந்த
மணவா ளர்பொற்றிருப் பாதாம் புயங்கட்கு மாலையென
மணவா ளர்சூடும் யமகவந் தாதியை வாசிமினே.

இதனதுபதப்பொருள்.

இம்மை - இக்காலத்தில்—மணம் - வாசனைபொருந்திய—வாள்-தேஜசுடைய — அரவிந்தைமார் - தாமரைமலரில்வாசஞ்செய்யும் அஷ்டலக்ஷ்மிகளும்—நோக்க - கடாக்ஷஞ்செய்ய— மறுமையில்-இனிவருங்காலத்தில்—மாமணவாளர்தம்-ஸ்ரீயப்பதியுடைய, பதம்-திருவடிகள்—வாய்த்திடும்-சித்திக்கும்—கோயிலில் - திருவரங்கம் பெரியகோயிலில்—வந்த-எழுந்தருளிய, அந்தமணவாளர்-அழகிய மணவாளருடைய—பொன் - பொலிவுற்ற— திருப்பாதாம்புயங்கட்கு - திருவடித்தாமரைகளுக்கு—மாலையென - மாலையென்று— மணவாளர் - அழகியமணவாளதாசரென்கிறதிவ்வியகவிபிள்ளைப் பெருமாளையங்கார்—சூடும்- சாத்தும்—யமகஅந்தாதியை—,வாசிமின்—பயிலுங்கள்—

காப்புகள்.

ஓரா ழிவெய்யவன் சூழுல கேழுவந் தேத்தரங்கர்
காரா ழிவண்ணப் பெருமா ளந்தாதிக்குக் காப்புரைக்கிற்
சீரா ழியங்கையிற் பொற்பிரம் பேந்திய சேனையர்கோன்
கூரா ழிசங்கந் திருக்கதை நாந்தகங் கோதண்டமே.

இ-ள். ஓர் ஆழி-ஒற்றைச்சக்கரத்தைப்பூண்டதேரினையுடைய—வெய்யவன்-ஆதவன்—சூழ்-சூழ்ந்துவரும்—உலகுஏழ்- சப்தலோகங்களும்—உவந்து-ஆனந்தமெய்தி—ஏத்து-பரவும்—அரங்கர்—, கார்-கரிய ❊ மேகம்போலவும் ❊ ஆழி-கடல்போலவும்—வண்ணம்-திருமேனியையுடைய—பெருமாள்-பெருமாளாகிய அரங்கர், அந்தாதிக்கு-அந்தாதியென்னும்பிரபந்தத்துக்கு—காப்பு-காப்பாக—உரைக்கில்-சொல்லுங்கால்—சீர்-சிறப்புற்ற—ஆழி - மோதிரமணிந்த—அம் - அழகான—கையில் - கரத்தில்—பொன் - சொன்னமயமான—பிரம்பு- பிரம்பினை—சோலினை ❊ ஏந்திய - பிடித்த—சேனையர்கோன்-சேனைமுதலியார்—கூர் - கூரிய—ஆழி - சக்கரத்தாழ்வான்—சங்கம்-பாஞ்சசன்னியம், திருக்கதை-தண்டாயுதம்—நாந்தகம் - கட்கம்—கோதண்டம் - சார்ங்கம் (ஆகியஇவைகளேகாப்பாகும்)—எ-று. (௧)

வையம் புகழ்பொய்கை பேய்பூ தன்மாறன் மதுரகவி
யையன் மழிசைமன் கோழியர் கோனருட் பாண்பெருமாண்
மெய்யன்பர் காற்பொடி விண்டுசித் தன்வியன் கோதைவெற்றி
நெய்யங்கை வேற்கலி யன்றமிழ் வேத நிலைநிற்கவே.

இ-ள். வையம்புகழ் - உலகோர்பரவும் — பொய்கை - பொய்கையாழ்வார்—பேய்- பேயாழ்வார்—பூதன் - பூதத்தாழ்வார்—மாறன் - நம்மாழ்வார்—மதுரகவியையன் -மதுரகவியாழ்வார்—மழிசைமன்-திருமழிசையாழ்வார், கோழியர்கோன்-குலசேகராழ்வார், அருள்பாண்பெருமாள் - திருப்பாணாழ்வார் — மெய் - உண்மை விளங்கிய—அன்பர்கால்பொடி-தொண்டரடிப்பொடியாழ்வார்—விண்டுசித்தன்-பெரியாழ்வார்—வியன்-பெருமையுற்ற—கோதை-சூடிக்கொடுத்தநாச்சியார்—அங்கை -அழகியகரத்திலே—வெற்றி-ஜெயம்பொருந்திய — நெய் - (சத்துருக்களது) நிணமுடைய—வேல்-வேலாயுதத்தையேந்திய—கலியன் - திருமங்கையாழ்வார்—தமிழ்வேதம் - (இந்தப்பன்னிருவரால் நியமிக்கப்பட்ட) திராவிடவேதமாகிய திவ்வியபிரபந்தம்—நிலைநிற்க - நீடூழிகாலமும் வாழியரோ—எ-று. (௨)

சீதரன்பூமகள் சேனையர்கோன்றென் குருகைப்பிரா
னாதமுனியுய்யக் கொண்டாரிராமர் நல்லாளவந்தா
ரேதமில்வண்மைப் பராங்குசதாச னெதித்தலைவர்
பாதமடைந்துய்ய வாழ்வானெம்பார்பட்டர் பற்றெமக்கே.

இ-ள். சீதரன்-திருமால்—பூமகள் - ஸ்ரீமகாலட்சுமி—சேனையர் கோன்-சேனைமுதலியார்—தென்-அழகிய—குருகைப்பிரான்-குருகூரிலுள்ளவர்க்கு உபகாரகரான சடகோபர்—நாதமுனி - உய்யக்கொண்டார்—இராமர்-மணக்கால்நம்பி—நல்- நலமுடைய—ஆளவந்தார்-ஸ்ரீஆளவந்தார்—ஏதமில்- அகளங்கராகிய- வண்மை-வளந்திகழும்—பராங்குசதாசர்-பெரியநம்பி—எதித்தலைவர் - எதிராஜர், பாதம்-(இவருடைய) திருவடிகளில்—அடைந்து- சேர்ந்து—உய்ந்த-உஜ்ஜீவித்த—ஆழ்வான்-கூரத்தாழ்வான்—எம்பார்-பட்டர்—பற்று-(இப்பதின்மூவரது திருவடி) சம்பந்தம்—எமக்கு- (உண்டாகக் கடவது)—எ-று. (௩)

திருமாலையாண்டான் றிருக்கோட்டிநம்பி திருவரங்கப்
பெருமாளரையர் திருமலைநம்பி பெரியநம்பி
யருமால்கழல்சே ரெதிராஜர்தாளிற்சிங் காதனராய்
வருமாரியர்க ளெழுபத்துநால்வரென் வான்றுணையே.

இ-ள். திருமாலையாண்டான் - (உடையவர்க்கு) திருவாய்மொழி உபதேசித்தவரும், திருக்கோட்டிநம்பி-சரமசுலோக முபதேசித்தவரும், திருவரங்கப்பெருமாளரையர் - துவயோபதேசஞ்செய்தவரும்—திருமலைநம்பி-ஸ்ரீராமாயணஞ் சொன்னவரும்—பெரியநம்பி-திருமந்திரோப தேசஞ்செய்தவரும்—அரும்- அருமையான—மால்-திருமால்—கழல்-பாதங்கள்—சேர்- அடைந்த—எதிராஜர்-பாஷியகாரர்—தாளில்-திருவடிகளில்—சிங்காதனராய்- சிம்மாசனாதிபதிகளாய்—வரும்-வரப்பட்ட—ஆரியர்கள்- ஆசாரியர்கள்—எழுபத்துநால்வர்-எழுபத்துநான்கு பேரும்—என்வான்துணை - எனக்குப் பெருமைபொருந்திய துணையாகக்கடவார்கள்—எ-று. (௪)

மாறன் பராங்கதி தந்தடியேனை மருட்பிறவி
மாறன்பரானகுழாத்துள்வைப்பான்றொல்லைவல்வினைக்கோர்
மாறன் பராமுகஞ் செய்யா மலென்கண் மலர்க்கண்வைத்த
மாறன் பராங்குசன் வாழ்கவென் னெஞ்சினும் வாக்கினுமே

இ-ள். மால்தன்-திருமாலுடைய—பராங்கதி - பரம்பதத்தை—தந்து-அளித்து—அடியேனை-தொண்டனானஎன்னை—மருள் - மயக்

கழுள்ள—பிறவி-சென்மம்—மாறு-நீங்கின—அன்பரான-தாசர்களாகிய—குழாத்துள்-கூட்டத்துள்—வைப்பான்-இருத்துமவன்—வல்-பலமுள்ள—தொல்லைவினைக்கு-பூர்வகன்மத்துக்கு—ஏர்-ஒப்பற்ற—மாறன்-விரோதியானவன்—பராமுகஞ்செய்யாமல்-அசட்டைசெய்யாது—என்கண்-என்மேல்—மலர்க்கண்-கடாக்ஷவிக்ஷண்ணியம்—வைத்த-இருத்திய—மாறன்பராங்குசன்-காரியாறனாகிய பராங்குசன்—வாழ்க-உறையக்கடவன்—என்-அடியேனது—நெஞ்சினும்-மனதிலும்—வாக்கினும்-மொழியிலும்—எ-று. (ச)

நூல்.

திருவரங் காவுறை மார்பா திசைமுகன் சேவிப்பக்கந்
திருவரங் காதரித் தின்னிசை பாடத் திருக்கண்வளர்
திருவரங் காவுன் பழவடி யேற்கருள் செய்யவெழுந்
திருவரங் காதலித் தேனுனக் கேதொண்டு செய்வதற்கே.

இ-ள். திரு-பெரியபிராட்டியார்—அரங்கு-ஆ-(உறையும்) இடம் ஆக—உறைமார்பா-வசிக்கும்மார்பையுடையவனே—திசைமுகன்-சதுமுகன்—சேவிப்ப-வணங்கவும்—கந்திருவர்-யாழ்வல்லோர்—அங்கு-அக்கோயிலில்—ஆதரித்து-காதலித்து—இன்-இனிய—இசைபாட-இராகத்தைப்பாடுதல்செய்யவும்—திருக்கண்வளர்-அழகியதாய்க்கண்படுக்கும்—திருவரங்கா-திருவரங்கனே—உன்-நினது, பழஅடியேற்கு-தொன்றுதொட்டுவரும் தாசபூதனாகிய எனக்கு—அருள்செய்ய-கிருபைபண்ண—எழுந்திரு,—உனக்கே-நின்றனக்கே—உன்ஒருவனுக்கே ※ தொண்டுசெய்வதற்கு-அடிமைபுரிவதற்கு—வரம்,—காதலித்தேன்-ஆசைப்பட்டேன்—எ-று. (க)

செய்ய வளைக்குரு வின்னருளாற்றிருத் தாள்வணங்கிச்
செய்ய வளைக்குலஞ் சூழரங் கேசன் சிறிதமுது
செய்பவளைக்கும் புவிக்குமங் காந்தசெவ் வாய்முகுந்தன்
செய்ய வளைக்குஞ் சிலம்பணி பாதங்கள் சேர்ந்தனமே.

இ-ள். செய்யவளை-பூமகளை—குரு-ஆசாரியரது—இன்-இனிய அருளால்-கடாக்ஷத்தினால்—திருத்தாள்வணங்கி-திருவடியைப்பணிந்து—செய்பு-வயல்களை இடமாகஉடைய-வளைக்குலம்-சங்கினங்கள்—சூழ்அரங்கேசன்-சூழ்ந்த அரங்கத்துக்குஈசன்—சிறிது அமுதுசெய்ய-கிஞ்சித்துஅருந்த—அளைக்கும்புவிக்கும்-தயிர்க்கும் உலகுக்கும்—அங்காந்த-அண்ணாந்த—திறந்த ※ செவ்வாய்-சிவந்த வாயினை யுடைய—முகுந்தன்-முகுந்தனென்னும் நாமத்தை யுடையவன்—(அவனது) செய்ய-செவ்விதாக—வளைக்

கும்-வளைக்கப்பட்ட—சிலம்பு-நூபுரம், பரிபுரம்—பாதச்சிலம்பு* அணி-தரிக்கப்பட்ட—பாதங்கள் - திருவடிகளில்—சேர்ந்தனம்—அடைந்தோம்—எ-று. (௨)

தனமா தரஞ்சொற் குதலைப் புதல்வர் தரணியில்லந்
தனமா தரஞ்செயும் வாழ்வஞ்சி யேதஞ்ச நீயெனப்போந்
தனமா தரங்கிக்க வெற்பெடுத் தாய்தண் ணனந்தசிங்கா
தனமா தரங்கமுள் ளாயரங் காமுத்தி தந்தருளே.

இ-ள். தனம் - (ஆடவரதுமதியை மருட்டுநீர்மையுள்ள) கொங்கைகளையுடைய—மாதர் - பெண்கள்—அம் - எழில்பொருந்திய—குதலைச்சொல்-மழலைமொழிகளையுடைய—புதல்வர்- பிள்ளைகள்—தரணி - பூமி—இல்லம் - மனை—தனம் - பொன்—(இவைமுதலியவற்றில்) ஆதரஞ்செய்யும் - காதல்கொள்ளும்—வாழ்வு- (நிலையற்ற அற்ப) வாழ்வுக்கு—அஞ்சி-பயந்தும்—தஞ்சம்நீயென- நீயேபற்றுக்கோடென—போந்தனம்-அடைந்தோம்—ஆ-பசுக்கள்—தரங்கிக்க - (இந்திரனனுப்பியமழையினால்) வருத்தமுற—வெற்பு-(கோவர்த்தன) கிரியை—எடுத்தாய் - (குடையாகப்) பிடித்தவனே—தண் - சீதளமுள்ள—அநந்தசிங்காதன - ஆதிசேடனைச் சிம்மாதனமாகவுடையவனே—மா-மகத்தாகிய * நாச்சியார் அவதரித்த *தரங்கமுள்ளாய்- திருப்பாற்கடலுள்ளவனே—அரங்கா—, முத்திதந்து அருள்-வைகுந்தம்கொடுத்து அருள்—எ-று. (௩)

தந்த மலைக்குமுன் னின்ற பிரானெதிர் தாக்கிவெம்போர்
தந்த மலைக்குமைத் தானரங் கேசன்றண் பூவினிடைத்
தந்த மலைக்குத் தலைவன்பொற் பாதஞ் சரணென்றுய்யார்
தந்த மலைக்கும் வினையா னைவார்பலர் தாரணிக்கே.

இ-ள். பலர் - அநேகர்—தாரணிக்கே - பூமியிலே—தந்தமலைக்கு - (தந்தங்களையுடைய மலைபோன்ற) யானைக்கு—முன்நின்றபிரான் - எதிரில் எழுந்தருளிச் சேவைசாதித்த ஸ்வாமி—எதிர்தாக்கி- எதிர்த்துத்தாக்கி—முன்னேமோதி * வெம்-உக்கிரமான—போர்தந்த - யுத்தம்புரிந்த—மல்லை - மல்லர்களை—குமைத்தான்— (தவிடுபொடியென)நொறுக்கினவன்—அரங்கேசன்-அரங்கத்துக்குஈசன் தண் - தண்மைபொருந்திய—பூவின்-தாமரையில்(உள்ள)—இடை- மருங்குலாகிய—தந்து - இழையினையுடைய—அமலைக்கு - பரிசுத்தாகாரமுள்ள ஸ்ரீமகாலக்ஷ்மிக்கு—தலைவன் - நாயகன்—(அவனது) பொன்-பொன்போன்ற * பொற்புள்ள * பாதம் - திருவடிகளே, சரணென்று-தஞ்சமென—உய்யார்-பிழையார்கள்—(ஆனால்)

தம்தம் அலைக்கும்-தங்கள் தங்களை வருத்தப்படுத்தும்— வினையால்- பூர்வகன்மத்தால்—நைவார் - மெலிவார்கள் (இது என்ன மூடத்தனமோ) -- எ-று. (௪)

தாரணி தானவன் பாலிரந் தான்சங்கம் வாய்வைத்தொன்னார்
தாரணி தானவஞ் செய்தா னரங்கன் றமர்கள்பொருந்
தாரணி தான வமரா வதியுந் தருநிழலுந்
தாரணி தான வயிரா வதமுந் தருகினுமே.

இ-ள். தாரணி - (மூன்றடி) நிலத்தை — தானவன்பால் - (மாவலிச்சக்கிரவர்த்தி என்னும்) அசுரனிடத்து —இரந்தான் - ஏற்றவன் — சங்கு - பாஞ்சசன்னியத்தை — அம் - அழகிய—வாய்வைத்து-வாயினிடத்திருத்தி—ஒன்னார்- சத்துருக்களது— தார் அணி-படைவகுப்பினது ஒழுங்கினை— தான் - தானொருவனே — அவம்செய்தான்- வியர்த்தமாகப்பண்ணினவன்—அரங்கன்—, (அவனது) தமர்கள்- தாசர்கள்—பொருந்தார்-சம்மதியார்கள்—அணிது ஆன-அழகியது ஆகிய—(அன்றிக்கே) அண்ணிது ஆன - சமீபத்துள்ளது ஆகிய— அடுத்த ※ அமராவதியும் - சுவர்க்கலோகமும் - தருநிழலும்-கற்பக நிழலும், தார் அணி-கிண்கிணிமாலையைப்புனைந்திருக்கும், தானம்- மும்மதங்களையுடைய, அயிராவதமும்-வெள்ளையானையையும், தருகினும் - கொடுத்தாலும்—(தேவேந்திரப்பட்டமே கிடைப்பதாயினும் பூலோகவைகுந்தமென்னும் திருவரங்கமா நகரைவிட்டுப்பிரியச்சம்மதியார்கள்—எ-று. (௫)

தருக்கா வலாவென்று புல்லரைப் பாடித் தனவிலைமா
தருக்கா வலாய்மயி லேகுயி லேயென்று தாமதராய்த்
தருக்கா வலாநெறிக் கேதிரி வீர்கவி சாற்றுமின்பத்
தருக்கா வலாயுதன் பின்றோன் றரங்கர்பொற் றாளிணைக்கே.

இ-ள். தரு - கற்பகவிருக்ஷத்துக்கு — காவலா - இறையாகிய இந்திரனே —என்று-எனப்புகழ்ந்து—புல்லரைப்பாடி- அற்பரைப் பாடி—தனம்-கொங்கைகளையுடைய—விலைமாதருக்கு - பொருட்பெண்டிர்க்கு — ஆவலாய் - ஆசையாய் —மயிலே - (நடனம்புரிவதில்) தோகையன்னவளே—குயிலே - (இன்னிசைபாட) கோகிலமன்னகுரல் படைத்தவளே—என்று - (எனமோகவாஞ்சையினால் இன்னன) கூறி—தாமதராய்-தாமசகுணத்தவராய்—தருக்கா-தருக்கி—செருக்கடைந்து ※ அலாநெறிக்கே - (நன்மை) அல்லாதமார்க்கத்திலே—திரிவீர் - உழலும்புலவீர்—பத்தருக்குஆ - பக்தருக்கு ஆக—அலம்- கலப்பையை—ஆயுதன் - ஆயுதமாகஉடைய பலபத்திரனுக்கு—பின்தோன்று-பின்வந்து அவதரித்த—அரங்கர் - அரங்க

ரது — பொன் - அழகுள்ள — தாளிணைக்கே - உபயதிருவடிக்கே, கவி சாற்றுமின் - நம்கவித்துவங்களைச்சொல்லுங்கள் — எ - று. (௬)

தாளத் தனத்தத்தைச் சொல்லிய ரால்வருந் தாழ்மலபா
தாளத் தனத்தத்தைத் தப்பதிற் பீர்புடை தங்கியவே
தாளத் தனத்தத்தைத் தீர்த்தா னரங்கன் சகடுதைத்த
தாளத் தனத்தத்தை யாயுதன் பாதந் தலைக்கொண்மினே.

இ-ள். தாளத்தனம் - தாளப்போன்றகுயங்களையும் — தத்தைச் சொல்லியரால் - கிளிமொழியன்ன வசனங்களையும் உடைய (அன்னிய) மாதரால் — வரும் - வராநின்ற — தாழ் - ஆழ்ந்த — மலம் - அசுத்தமாகிய — பாதாளத்து - நரகத்தின் — அனத்தத்தை - கேட்டை, தப்பதிற்பீர் - தப்பிக்கரையேறுவீர்கள் ❋ தப்பித்துக்கொள்ள இருப்பீர்கள் ❋ புடைதங்கிய - பக்கத்தேவராநின்ற — வேதாளத்தன் - வேதாள கணங்களையுடையசிவனது — அத்தத்தை - (பிச்சையெடுத்தலாகிய) அந்தவிபத்தை — தீர்த்தான் - ஒழித்தவன் — அரங்கன் —, சகடுஉதைத்த - சகடாசுரனைச்சாடிய — தாள் - பாதங்களையுடைய — அத்தன் - அப்பன் — அத்தத்து - கரத்திலே — ஐ ஆயுதன் - பஞ்சாயுதங்களையேந்தியவன் — (அவனது) பாதம் - திருவடிகளை — தலைக்கொள்மின் - சிரசில் அணியுங்கள் — எ - று. (௭)

தலையிலங் காபுரஞ் செற்றா னரங்கனென் றாழ்சொற்புன்கு
தலையிலங் காதரஞ் செய்த பிரான்சர ணன்றிமற்றோர்
தலையிலங் காநின்ற கண்ணிலங் காண்கைக்குத் தாழுகைக்குத்
தலையிலங் காதிலங் கேட்கைக்கு வாயிலஞ் சாற்றுகைக்கே.

இ-ள். தலை - முதன்மைபெற்ற — இலங்காபுரம் - இலங்கைவாழ் அரக்கரை — செற்றான் - சங்கரித்தவன் — அரங்கன் —, என் - தாசனாகியஎனது — தாழ் - இழிவுடைய — சொல் - மொழிகளாலாயகவித்துவங்களை - புன்குதலையில் - மழலைச்சொற்கள்போல், அங்கு - யான் பாடுகிற அவ்வவ்விடங்களில் — ஆதரம்செய்தபிரான் - ஆசைப்பட்ட உபகாரகன் (அவனது) சரண் அன்றி - திருவடிகள் அல்லாது — மற்றோர்தலை - வேறோர் தெய்வத்தின் இடத்தில், காண்கைக்கு - நோக்குதற்கு — இலங்காநின்ற - ஜொலிக்கும் — கண் இலம் - நேத்திரங்கள் உடையோம் அல்லேம், தாழுகைக்கு - வணங்குதற்கு — தலை இலம் - சிரசுடையோம் அல்லேம் — கேட்கைக்குக்காது இலம் (அந்தத்தெய்வத்தின்புன்சரிதை) கேட்கிறதற்குச்செவியுடையோம் அல்லேம் — சாற்றுகைக்கு - துதிசொல்ல — வாய் இலம் - வாயுடையோம் அல்லேம் (இவ்வவயவங்களெல்லாம் அரங்கனுக்கே தொண்டுபட்டிருக்கின்றன — எ - று. (௮)

கைக்குஞ்சரமன் றளித்தா யரங்கமண் காக்கைக்குமாய்க்
கைக்குஞ் சரமச ரம்படைத் தாய்கட னீறெழத்து
கைக்குஞ் சரமக ரக்குழை யானென்னைக் கைக்கொளுடல்
கைக்குஞ் சரம தசையிலஞ் சேலென்றென் கண்முன்வந்தே.

இ-ள். கை-துதிக்கையையுடைய—குஞ்சரம்-(கெஜேந்திரனென்னும்) யானையை — அன்று - (ஆதிமூலமேயெனவிளித்த) அக்காலத்தில்—அளித்தாய்-இரக்ஷித்தவனே—அரங்க—, மண்—உலகினை—காக்கைக்கும்-அளிப்பதற்கும்—மாய்க்கைக்கும் - அழிப்பதற்கும், சரம் அசரம்-ஸ்தாவரசங்கமங்களை—சராசரங்களை ❊ படைத்தாய்-சிருஷ்டித்தவனே—கடல்-சமுத்திரமானது—நீறு - சாம்பலாய்—எழ - எழும்ப—துகைக்கும்-கலக்கும்—சர- அஸ்திரமுடையாய்—மகரக்குழையாய்-மகரகுண்டலத்தைத் (திருச்செவியில்) அணிந்தவனே—உடல்- (எனதுஆவி) யாக்கையை—கைக்கும்- வெறுத்தேகும்—சரமதசையில்-அந்தியகாலத்தில்—அஞ்சேலென்று - பயப்படாதேயென—என்- அடியேனது, கண்முன்-நயனங்கள்முன்னர், வந்து-தோன்றி—என்னைக்கைக்கொள்—எ-று. (௯)

கடல்சேறுஎழஎன்றும்பாடம்.

வந்தனை யேற்றனை யென்புன்சொற் கொண்டனை வன்மனத்தே
வந்தனை யேற்றனை யாவையு மாயினை வான்றரவு
வந்தனை யேற்றனைத் தானொத்த தாளில்வைப் பாய்பலித்து
வந்தனை யேற்றனைத் தீர்த்தா யரங்கத்து மாதவனே.

இ-ள். என்-அடியேனது—வந்தனை - ஆராதனையை—ஏற்றனை-அங்கீகரித்தாய்—புன்சொல்-ஈனமுள்ள மொழிகளால் தொடுக்கப்பட்ட கவித்துவங்களையும்—கொண்டனை - ஏற்றுக்கொண்டாய்—(அதுவுமன்றி) வன்மனத்தே - வலியஇதயத்திலும் — வந்தனை-எழுந்தருளினாய் — ஏற்று - உயர்த்திச்சொல்லும்—அன்னை - தாய் (முதலிய) யாவையும்-சகலமும்—ஆயினை-நீயே ஆனாய் — வான்தர-(அடியேனுக்கு) வைகுந்தம் அளிக்க — உவந்தனையேல் - உவப்பெய்தினையாகில் — தன்னைத்தான்ஒத்த - தனக்குத்தானே ஒப்பாகிய—அத்விதீயமான ❊ தாளில்-திருவடியில்—வைப்பாய் - இருத்துவாய்—பலித்துவந்தனை - பலியாகியதுவந்தனையை — ஏற்றலாகிய வேதனையை ❊ (அன்றிக்கே) பலித்துவந்தனை-இரத்தலை—ஏற்றனை- இடபவாகனமுடையசிவனுக்கு—தீர்த்தாய்-ஒழித்தவனே—அரங்கத்து-திருவரங்கத்தில் (துயில்கூரும்) மாதவனே - இலக்ஷுமிநாயகனே—பின்னைகேள்வனே—எ-று. (௰)

மாதங்கத் தானை யரங்கனை வஞ்ச னிலங்கையிலே
மாதங்கத் தானை யிருதிங்கடாழ்த்துப்பின் வாம்பரிதேர்
மாதங்கத் தானை வலத்தானைமுன்வதைத் தானைத்தன்பான்
மாதங்கத் தானைவைத் தானைவைத்தேனென் மதியகத்தே.

இ-ள். மா-மகத்தாகிய்—தங்கத்தானை-கனகாம்பரம்(தரித்த) பொன் ஆடை (புனைந்த) ❊ அரங்கனை,—வஞ்சன் - தூர்த்தனான இராவணனது—இலங்கையிலே-இலங்காபுரியிலே—மா - (திருமகளாகிய்) சீதாபிராட்டியார்—தங்க-இருக்க—தான்,—ஐ இருதிங்கள் - பத்துமாதம்—தாழ்த்து-கழித்து—பின்- அதன்மேல்—வாம்பரி-தாவுகிற துரகங்களிலும்—தேர்-இரதங்களிலும்—மாதங்கம்-கஜங்களிலும்—தானை-பதாதிப்படைகளிலும்—வலத்தானை - திண்ணியனான இராவணனை—முன்வதைத்தானை-முன்னர் தேய்த்தவனை—தன்பால்-தனது (வலது) பாரிசத்தில்—மாது அங்கத்தானை- அர்த்தநாரீச்சுரனை—வைத்தானை - உடையவனை—என்மதியகத்து-அடியேனது மனத்தினுள்ளே—வைத்தேன்-இருத்தினேன்—எ-று. (கக)

மதிக்க வலைப்புண்ட வெண்டயிர் போல மறுகுறுமென்
மதிக்க வலைப்புண் டணிகின் றிலேன்மண் ணும் வானகமு
மதிக்க வலைப்புனல் சூழரங் காநின் மனத்தருடா
மதிக்க வலைப்புன் பிறப்பினி மேலும் வருங்கொலென்றே.

இ-ள். அலைப்புனல்சூழ்அரங்கா - திரைகளை உடைய (காவிரி) நதிசூழும் அரங்கநகருடையாய்—புன்பிறப்பு - இழிவுடைய ஜென்மமானது—இனிமேலும் - இன்னமும்—வருங்கொல்என்று-(தொடர்ந்து) வருமோஎன—மதிக்க- மர்த்திக்க—கடைய ❊ அலைப்புண்ட-துளும்பல்உற்ற—வெண்தயிர்போல - வெண்மைபொருந்திய ததிபோல—மறுகுஉறும்என்-கலங்குதல்பொருந்திய அடியேனது—மதி-மனத்தின்—கவலைப்புண் - கவலையாகியவிரணம்—தணிகின்றிலேன்-ஆறப்பெறகில்லேன்—மண்ணும்வானகமும்- மண்ணவரும் விண்ணவரும்—மதிக்க-கருதும்படிக்கு—நின்- உனது —மனத்து அருள் - இதயத்திருந்துண்டாகும் கிருபையை—தாமதிக்க அல்லை-(அளிக்க) ஜாலம்செய்யாதிருப்பாயாக—எ-று. (யஉ.)

வருந்து வரைப்பட்ட மங்கைய ரெண்மர் மனங்களைக்க
வருந்து வரைப்பட்ட வாயரங் கேசனை வஞ்சப்பகை
வருந்து வரைப்பட்ட வேழமட் டானை மறந்துலகோர்
வருந்து வரைப்பட்ட வீப்போன் மடந்தையர்மால்வலைக்கே.

இ-ள். துவரை - துவாரகாபுரியில்—வரும் - அவதரித்த—பட்ட மங்கையர் - பட்டத்துத் தேவியர்கள்—எண்மர் - எட்டுப்பேர்க

ளுடைய—மனங்களை-இதயங்களையும்—கவரும் - கிரகிக்கப்பட்ட, துவர்-பவளம்போலும்—ஐ-சுந்தரம்—பட்ட - பூத்த—வாய் அரங்கேசனை-திருஅதரமுடைய அரங்கநாதனை—வஞ்சப்பகைவர்-கொடூரமுள்ளபகைஞர்கள்—உந்து-செலுத்திய,வரைப்பட்ட-(பொன்) அசலம்அனைய—வேழம்-களிற்றை—அட்டானை- மாரணஞ்செய்தவனை—மறந்து-கடைப்பிடியாது—அயர்வுற்று ※ உலகோர்-மேதினியோர்—ஐ-சிலேஷ்மத்தில்,பட்ட-சிக்கிய, ஈப்போல்-ஈயென்ன, மடந்தையர்-மடவாரது—மால்-காமமென்னும்—வலைக்கு-கண்ணியிலே—(அகப்பட்டு) வருந்துவர்-இடுக்கணெய்துவார்கள்—எ-று.()

மாலைக்கல் லார மடவார் புண்ணாக்கையில் வாஞ்சைவைத்து
மாலைக்கல் லாரம் புலிக்குநை யாநிற்பர் மாய்விப்பதோர்
மாலைக்கல் லாரம் புயத்தா ளில்வைக்கு மதிலரங்க
மாலைக்கல் லாரஞ் சலியாரென்னேசில மானிடரே.

இ-ள். சிலமானிடர்-சிறிதுபேர்—கல்லாரமாலை - செங்கழுநீர்த்தொங்கல் (புனையும்)—மடவார் - பேதையரது—புண் - புண்ணாகிய—ஆக்கையில் - அங்கத்திலே—வாஞ்சைவைத்து - காதல்செலுத்தி—மாலைக்கு - அந்திப்போதுக்கும்—அல்-கங்குலில்—ஆர்-பொருந்திய—அம்புலிக்கு - நிலவுக்கும்—மதியத்துக்கும் ※ நையாநிற்பர் - மெலிந்திருப்பார்கள்—மாய்விப்பதுஓர் - (இப்படித்தங்களை) தேய்க்கிற ஒரு—மாலை - காமமயக்கத்தையும்—கல்லார் - அகழார்கள்—அம்புயத்தாளில் - (சரணெய்தியவரை) அரவிந்தப்பாதங்களில்—வைக்கும் - இருத்துகிற—மதில் - சப்தப்பிரகாரங்களுடுத்த—அரங்கமாலை - திருவரங்கமாநகரில் (பள்ளிகொண்ட) திருமாலையும்—கல்லார்-பயில்கிலர்—அஞ்சலியார் - கைகூப்பிலர்—என்னே-இதுஎன்ன அறிவீனமோ—எ-று. (௰௪)

மானிட ராக வரலரி தோர்மண் டலத்திநெறி
மானிட ராகமி லாதவ னுதன் மலரயனூர்
மானிட ராகமத் தாலன்ப ராய வரங்கத்துளெம்
மானிட ராக மலரடிக் காட்படும் வாழ்வரிதே.

இ-ள். ஓர்மண்டலத்தில் - (இந்த) அத்விதியமான பிரபஞ்சத்தின்கண்—மானிடர்ஆக - நரராய்—வரல்- வருதல்—உற்பவித்தல், அரிது - அருமை—(அப்படி உதித்தாலும்) நெறிமான் (ஆதல் அரிது) - நீதியுள்ளவன் (ஆகிறதுகடினம்)—(அதிலும்) இடர்ஆகம்-விகாரங்கள்பொருந்திய அங்கம் ※ இல்லாதவன் ஆதல் (அரிது)-அற்றவன்ஆவது (அபூர்வம்)—(அதனிலும்) மலர்அயனூர்-(உந்திப்) பதுமத்து வாழ்கிற நான்முகனும்—மான் - உழையினை—இடர்,

இடதுகரத்தேந்திய பசுபதியும்—ஆகமத்தால்-ஆகமவிதியால் (மனனஞ்செய்து), அன்பர்ஆய - நேசராகிய, (அவனது) கருணைக்குரியவர்ஆகிய ❊ அரங்கத்துள் எம்மானிட - திருவரங்கத்துள் (துயில்கூரும்) எமதுஸ்வாமியினது—ராக - செய்ய—மலரடிக்கு- அரவிந்தத்தாள்களுக்கு— ஆட்படும் - தொண்டுபடும்—வாழ்வு - சுகம்—அரிது-துர்பலம்—எ-று. எம்மான்இடம்-என்பதுருபுமயக்கம். (௰௫)

அரிதா மரைக்கணந் தோலுடுத் தாரய னார்க்கரியான்
அரிதா மரைக்கணம் மான்றிருப் பாத மடைமின்சன்மம்
அரிதா மரைக்கணந் தங்கா துயிரவ னூர்வினவில்
அரிதா மரைக்கண மீர்த்தோடும் பொன்னி யரங்கமன்றே.

இ-ள். அரி - வாசவற்கும்—தாம் அரைக்கண் - தன்மருங்கில்—அம் - எழில்பெற்ற—தோல்- அதளை—உடுத்தார்க்கு-தரித்தவனான நீலகண்டனுக்கும்—அயனார்க்கு - வேதாவுக்கும்—அரியான் - ஓர்தற்கு அசக்கியன்—அரி - (மேற்கூறிய அரிஹரப் பிரமாதியரையும் யுகாந்தத்தில் கபளீகரித்து ஹரிப்பதனால்) ஹரியென்னும் நாமம் பெற்றவன்—தாமரைக்கண் - அம்புஜநேத்திரங்களையுடைய—அம்மான் - ஸ்வாமி—(அவனது) திருப்பாதம் - திருவடிகளில்—அடைமுன் - சேருங்கள்—(அடையில்) சென்மம் அரிதாம்-பவம் இல்லாமல்போம், உயிர் அரைக்கணம் - (இனியிந்த) ஆன்மா அரைக்ஷணமேனும்—தங்காது - (வேறொருகூட்டில்) பொருந்தாது—அவன் ஊர் - அவனுடைய திருப்பது—வினவில் - (எவணெனக்) கேட்கில்—அரி - கண்டீரவங்களையும்—தா - தாவுகின்ற—மரைக்கணம்-கானக்குதிரையின் கூட்டங்களையும்—ஈர்த்து - இழுத்துக்கொண்டு, ஓடும் - ஓடிவராநின்ற—பாயும் ❊ பொன்னி-காவேரி (சூழ்ந்த), அரங்கம்—எ-று. அன்று-ஏ-அசை. (௰௬)

அரங்கா துவார்கணை கண்வள்ளை கோங்கி னரும்புமங்கை
அரங்கா துவார்முலை யென்றைவர் வீழ்ந்தன ராடரவின்
அரங்கா துவாரமி லாமணி யேயணி யார்மதில்சூழ்
அரங்கா துவாரகை யாயடி யேனுன் னடைக்கலமே.

இ-ள். மஙகையர் - கன்னியரது—கண் - நயனஙகளை—அரம் அரத்தினால்—காது - அராவப்பட்ட—வார்கணை- நெடிய அம்பு—அம்காது - எழிற்செவியை—வள்ளை - வள்ளைக்கொடி— வார்முலைகச்சிறுக்கிய கொஙகைகளை—கோஙகின் - ஞாழலினது—அரும்பு-மூகை—என்று - எனஉவமித்து—ஐவர் - பஞ்சேந்திரியஙகளாகிய ஐந்துபேர்—வீழ்ந்தனர் - காமுற்றனர்— ஆடு - ஆடுதல்செய்யும், அரவின் அரஙகா - திருவநந்தாழ்வானை இடமாகவுடையனே—துவார

மில்லா - துருவில்லா — மணியே - மாணிக்கமே — அணி - சுந்தரம் — ஆர்-இளரும் — மதில்-பிரகாரங்களால் — சூழ்அரங்கா-சூழப்பட்ட அரங்கநகருடையாய் — துவாரகையாய் - துவாரகாபுரியுற்றவனே — அடியேன் - தாசபூதனாகிய நான் — உன் அடைக்கலம்- நினதுகையடையானேன் — எ-று. (௰௭)

அடைக்கலந் தாயத் தவர்போ லுடலுறை யைவரையும்
அடைக்கலந் தாயுல கங்கொண்ட தாள்களுக் கண்ட முண்டால்
அடைக்கலந் தாயரங் காவா யர்பாடியி லன்றுநெய்பால்
அடைக்கலந் தாய்வைத்து வாய்நெறித் தூட்ட வழுமையனே.

இ-ள். அண்டம் - அண்டங்களை — உண்டு - அருந்தி — ஆல் அடை - வடபத்திரத்தில் — கலந்தாய் - சேர்த்துபள்ளிகொண்டவனே — அரங்கா —, அன்று- அன்றுமுற்காலத்தில், ஆயர்பாடியில்-திருவாய்ப்பாடியில் — இடைச்சேரியிலே ※ தாய் - அன்னையாகிய அசோதைப்பிராட்டியார் — நெய் - நெய்யினை — பாலடைக்கலம் - பாலடையாகிய கலத்திலே — வைத்து - வார்த்து — வாய் - உன்திருவாயை — நெரித்து - நெரியச்செய்து — ஊட்ட - உண்ணுவிக்க — அழும் - (ஒன்றும் அறியாச் சிறுகுழவியென்ன) ரோதனஞ்செய்யும், ஐயனே - அப்பனே — தாயத்தவர்போல் - தாயாதிகளைப்போல, பங்காளிகளைப்போல ※ உடல் உறை - (எமது) மெய்யில் குடியிருக்கும், ஐவரையும் - பஞ்சேந்திரியங்களையும் — அடைக்கலம் - நிக்கிரகிக்கமாட்டோம் — தாய்-தாவி — உலகம் - புவனங்களை — கொண்ட - அளந்துகொண்ட — தாள்களுக்கு - திருவடிகளுக்கு — அடைக்கலம் - கையடையானோம் — எ-று. (௰௮)

ஐப மருந்திவை யுண்ணென்று மாதரட் டூட்டுஞ்செல்வம்
ஐப மருந்தினைப் போதே யவரின்ப மாதலினால்
ஐப மருந்தியக் கங்குறு காமுன் னரங்கர்க் கன்பாய்
ஐப மருந்தியும் வாழ் பின்கண் மேலுமக் காநந்தமே.

இ-ள். ஐப - ஐபா — மருந்து - தேவாமுதத்துக்கு ஒப்பாகிய — இவை-இவ்வுணக்களை — உண்-அருந்து — என்று - என (அன்புடன்) கூறி — மாதர் - பெண்கள் — அட்டு-சமைத்து — ஊட்டும்-அருந்தச்செய்யும் — செல்வம் - ஐசுவரியம் — செல்வவாழ்வினது நிலைமை ※ ஐயம் - சந்தேகம் — அரும்தினைப்போதே - சிறிய தினையளவு போழ்தே — அவர் - அந்தப்பெண்களுடைய — இன்பம் -போகரசமும் — ஆதலினால் - ஆகையால் — ஐ - கோழை — அமரும் - (நெஞ்சில்) பொருந்துகிற — இயக்கம் - கலக்கமானது — குறுகாமுன்-நெருங்குதற்கு முன்னமே — அரங்கர்க்கு —, அன்பாய் - நேசர்க

ளாய்—ஐயம் அருந்தியும் - யாசகம் (செய்து) பக்ஷித்தாயிலும்—வாழ்மின்கள்-உய்யுங்கள்—மேல்-அநந்தரம்—இனிமேல் ※உமக்கு நுங்களுக்கு—ஆநந்தமே-(இது) பேரின்பந்தான்—எ-று. (௰௯)

நந்த மரங்களை மார்கடலேழு நடுங்கவெய்த
நந்த மரங்களைப் பற்றுநெஞ் சேவினை நையுமுன்கை
நந்தமரங்களை யார்மயல் போம்வரு நற்கதிவா
நந்த மரங்களை வர்க்குமெஞ் ஞான்று நரகில்லையே.

இ-ள். மரம் - (மரா) மரங்கள் — நந்த - கெடவும் — கனை - சத்திக்கிற—மா-பெருமையுற்ற—கடல்எழும்- சப்தசமுத்திரங்களும், நடுங்க - அதிரவும்—எய்த - (அஸ்திரப்) பிரயோகஞ்செய்த — நம்தம்-நமது — (அன்றிக்கே) நந்து அம்- (நாளுக்குநாள்) விர்த்தியடைந்துகொண்டேவரும் லாவண்ணியத்தையுடைய — அரங்கனை—,நெஞ்சே - மனமே—பற்று-பேணு—கருது※ (அப்படிச் செய்தனையேல்) வினை - (பிறத்தல் இறத்தல்என்னும்இரண்டு)கன்மங்களும்—நையும் - நசித்துப்போம் — முன்மை - முன்னங்கையில்—நந்து-சங்கவளைகள் —அமர்-பொருந்தப்பட்ட, அங்கனையார் - தெரிவையரிடத்து (வினையுப்) மயல்- (காம) மயக்கமும்—போம் -அறும்— நற்கதி-நல்லபதவி—வரும்-சித்திக்கும்—வானப்பிதுர்க்களுலகத்திலே—தமர் - நமதுஉறவினராய்—அங்கு -அங்குள்ள—அனைவர்க்கும்-யாவருக்கும்—எஞ்ஞான்றும் -எந்நாளிலும்—நரகு-துர்க்கதிஇல்லை—எ-று. (௨௰)

நரகந் தரம்புவி யிம்மூன் றிடத்து நனிமருவி
நரகந் தரங்கித்து வெங்கா லற்கஞ்சுவர் நாயகவா
நரகந் தரம்புட் பிடரோ றரங்கர்நல் லாய்க்குலத்தி
நரகந் தரங்கமுற் றூரடி யார்க்கு நமனஞ்சுமே.

இ-ள். நரகு-பாதாளலோகம்— அந்தரம் - சொர்க்கலோகம்—புவி - மத்தியலோகம்—இம்மூன்றிடத்தும் (என்னும்) இந்தமூன்றுலகத்தின்கண்ணும்— நனி - சாலவும்—மருவினர்- பொருந்தினபேர்கள்—அகம்-மனம்—தரங்கித்து-துன்பமுற்றி,வெம்காலற்கு-கொடூரமுள்ள அந்தகனுக்கு—அஞ்சுவர்-உளம்நடுங்குவார்கள், நாயக - சிரேஷ்டமான — வானரகந்தரம் - (வானரமாகிய) அநுமாரதுகழுத்திலும்—புள் கருடப்பறவையினது—பிடர் - தோண்மேலிலும் — ஏறு - எழுந்தருளப்பட்ட — அரங்கர்—,நல் - நன்மைபொருந்திய—ஆய்க்குலத்தினர்-இடைக்குலத்தவருடைய—அகம்-கிரகத்தும்—தாங்கம்-க்ஷீராப்தியிலும்--உற்றூர்- வாழுமவர்—அடியார்க்கு—,நமன்-(அந்தக்)காலன்—அஞ்சும்-பயப்படுவான். (௨௧)

அஞ்சக் கரத்தலைக் கங்கைய னேற்றலு மஞ்சிறைய
அஞ்சக் கரத்தலைக் குண்டிகை யான்மண்டை யங்கைவிட்டே
அஞ்சக் கரத்தலைச் செய்துபித்தேக வருளரங்கன்
அஞ்சக் கரத்தலை வன்றாளலான்மற் றரணில்லையே.

இ-ள். அஞ்சஅக்கம் - பஞ்சாக்ஷரத்தையுடைய—தலைக்கங்கையன்-கங்கைத்தலையன் —மந்தாகினியைச்சிரத்திலுடையசிவன் ❊ எற்றலும்-இரக்குமளவில்—அம் - அழகிய—சிறைய - சிறகுகளைக்கொண்ட —அஞ்சம்-அன்னவாகனமும்—கரத்தலை- அஸ்தத்தில்—குண்டிகையான்-கமண்டலமுமுடையபிரமனது, மண்டை-கபாலமானது—அங்கை - உள்ளங்கையினை—விட்டு - நீங்கி—கரத்தலைச் செய்து - கரந்து—ஒளிந்து ❊ அஞ்ச- நடுங்கவும்—பித்து-பிராந்தி, ஏக —நீங்கவும்—அருள் - கருணைசெய்யும்—அரங்கன்—, அம் - சுந்தரமுள்ள—சக்கரத்தலைவன் - ஆழிப்பிரான் - (அவனுடைய) தாள் அல்லால் - திருவடியல்லாது — மற்று - வேறு—அரண் - காப்பு—இல்லை - அவ்வரனுக்கு இல்லாமற்போயிற்று—எ-று. (௨௨)

இலங்கையி லாதர னைங்கரன் மோடி யெரிசுரத்தோன்
இலங்கையி லாத மலையான வீச னிரிய வெம்போர்
இலங்கையி லாத படிவா ணனைச்செற்ற வென்னரங்கன்
இலங்கையி லாதவன் போகக்கண் டானென் னிதயத்தனே.

இ-ள். இலங்கு - வயங்கும்—அயில் - வேலினை—ஆதரன் - அவாவிய ஆறுமுகன் — ஐங்கரன் - ஐந்துகரங்களையுடைய யானைமுகன், மோடி - பத்திரகாளி — எரிசுரத்தோன் - (சுடுகாட்டினையுடைய) வீரபத்திரன்—இல்லம் - வீடு—கையிலாதமலை ஆன- கையிலாசகிரி ஆகிய—வங்கவரை ஆகிய ❊ ஈசன் - நக்கன்—இரிய - (இவர்களனைவரும்) முறிந்தோட—வெம்போரில் - உக்கிரமான அமர்க்களத்தில், அம் - அழகான — கை இல்லாதபடி - கரங்கள் அறும்வண்ணம் — வாணனை-வாணசுரனை —செற்ற-கோபித்த, என் அரங்கன்—, இலங்கையில்-இலங்காபுரத்தில்—ஆதவன்-கதிரவன் — போகக்கண்டான்-மேவப்பணித்தவன்—என் இதயத்தன் - அடியேனதுஇதயகமலத்துற்றனன்—எ-று. (௨௩)

அத்தனை வேதனை யீன்றவரங்கனை யைம்படைசேர்
அத்தனை வேதனை வாய்வைத்த மாயனை யாரணங்கோர்
அத்தனை வேதனைத் தீர்த்தானைச் சேர்க்கில ளாயிரஞ்சால்
அத்தனை வேதனை யப்புவள் சாந்தென் றனலனாத்தே.

இ-ள். அத்தனை - எப்பொருட்கும்இறைவனை— வேதனை - வேதாவை—ஈன்ற - பெற்ற —அரங்கனை—, ஐம்படை - பஞ்சாயுதங

கள்—சேர்-கலந்த, அத்தனை-கரத்தையுடையவனை—வேதனை-வேய்
தன்னை, வேய்ங்குழலினை*வாய்வைத்த - திருவாயினிடத்து (ஊது
தற்கு) வைத்த—மாயனை-ஆச்சரியபூதனை, ஆரணங்கு-பார்வதியை,
ஓர்அத்தன் - ஒருபாகத்துடைய அரன், நைய - மெலியும்—வேதனை-
வருத்தத்தை—தீர்த்தானை-ஒழித்தவனை—சேர்க்கிலள்-சாரச்செய்ய
கில்லாள், அன்னை-என்தாய்,(ஆனால்) ஆயிரம்சால் அத்தனை-ஆயிரம்
சால் அவ்வளவு—வேது-வெப்பத்தை—சாந்து என்று-சந்தனக்கு
ழம்பென—அனல்-அழலை, அரைத்து—,அப்புவள்-பூசுவாள்.(௨௪)

அரைக்கலை வேலை யுடுத்தமண் பல்பக லாண்டுபற்றல்
அரைக்கலை வேலை யுடைவேந் தர்வாழ்வெண்ண லைவரையும்
அரைக்கலை வேலை யவர்க்கே புரிவையென் றாலுநெஞ்சே
அரைக்கலை வேலை யரங்கனுக் காட்பட வாதரியே.

இ-ள். அரைக்கலை-மருங்கிலாடையென்று—வேலை-வாரிதியை—
உடுத்த - வணிந்த—மண்-ஞாலத்தை—பல்பகல்-அநந்த நாள்வரை
க்கும்—ஆண்டு-புரந்து—பற்றலரை-மேவலரை—கலை- நிலைகுலைந்
தோடச்செய்கின்ற—வேலை- வேலாயுதத்தை — குந்தத்தை*உடை-
உடைய—வேந்தர்-நிருபரது—வாழ்வு-(நிலையற்ற) வாழ்க்கையை,
எண்ணல் - (நிஜமெனக்) கருதாதே—நினையேல் * ஐவரையும் - ப
ஞ்சேந்திரியங்களையும்—அரைக்கலை - அடக்கமாட்டாய்—அவர்
க்கே - (அவைசெல்வழியிலேயேசென்று) அவைகளுக்கே—வேலை
புரிவைஎன்றாலும் - பணிவிடை செய்வாயெனினும்—நெஞ்சே-ம
னமே—அரைக்கலைவேலை-அரைக்கலைப்போதேனும்—அரங்கருக்
கு—, ஆட்பட - அடிமைசெய்ய—ஆதரி - வாஞ்சைகொள்—எ-று.
(நெஞ்சே மன்னவர்வாழ்வுகருதாதே, அரங்கனுக்குத்தொண்டுபட
இச்சைகொள் எனக்கூட்டுக.) (௨௫)

ஆதவ னந்தரந் தோன்றா மறகன்மழை யார்த்தெழுநாள்
ஆதவ னந்தர.வெற்பெடுத் தானடி யார்பிழைபார்
ஆதவ னந்தரங் கத்தானரங்க னடியெனென்றுள்
ஆதவ னந்தரங் கண்டீர்வினைவந் தடைவதுவே.

இ-ள். ஆதவன்-தினகரன்—அந்தரம் - விண்ணில்—தோன்றாம
ல்-உதிக்காவண்ணம்—கண்ணுக்குப் புலன்படாதவாறு*கல்மழை-
பாஷாணவருஷம்—ஆர்த்து - ஒலித்து—எழும்நாள்-விஞ்சுகிறபோ
து—ஆ-கோக்கள்—பசுவினங்கள் * தவனம்தர - தவிக்க—வெற்
பெடுத்தான் - (கோவர்த்தன) கிரியை (குடையாயெடுத்து) பிடித்த
வன்—அடியார் - தொண்டர்களுடைய—பிழை- செயிர்களை—பா
ராதவன்-நோக்காதளிப்பவன்—அர்தரங்கத்தான்-(அகில சராசரங்க

விலும்) பரமரகசியமாக நிறைந்திருப்பவன், (அர்த்தாந்தரம்) அம்-அழகிய — தரங்கத்தான் — க்ஷீராப்திசயனன் — அரங்கன் —, (அவனுடைய) அடியெனென்று - தாசபூதனேனென — உள்ளாத-கருதாத — அநந்தரம்-பிறகு — வினை- எல்லாத்தீவினைகளும் — வந்து அடைவது-எய்துவது — கண்டீர், — எ-று. (௨௬)

அடையப்பன் னாகங் கடிவா யமுதுக வங்கிகுளிர்
அவடயப்பன் னாக மருப்பா யுதமிற வன்றுகுன்றால்
அடையப்பன் னாக மிசைதாங் கப்பாலற் கருள்செய்ததால்
அடையப்பன் னாகங் கரியா னரங்கனெட் டக்கரமே.

இ-ள். அடை-அடைகிடக்கப்பட்ட — அப்பல்நாகம்- அந்த அநந்த சர்ப்பங்கள் — கடிவாம்-கடித்தஇடத்து — அமுது - அமிர்தம் — உகசித்தவும் — அங்கி - வன்னி - குளிரடைய - தட்பமெய்தவும் — பல்-(நான்கு) கோட்டினையுடைய — நாகம் - (ஐராவதமென்னும்) வேழத்தின் — மருப்புஆயுதம் - தந்தங்களாகிய படைக்கலம் — இற-ஒடியவும், அன்று —, குன்றால்-வரையினால் — அடை-தடுக்கப்பட்ட — அப்பு - முந்நீர் — அந்நாகமிசை-அந்தமலையின்மேல் — தாங்க - (அச்சிறுவனை) ஏந்தவும் — பாலற்கு - (மைந்தனாகிய) பிரகலாதாழ்வானுக்கு — ஆல்அடைஅப்பன் - வடபத்திரத்துள் (துயில்கூரும்)எந்தை — ஆகம்கரியான் - அஞ்சனமேனியன், அரங்கன் —, எட்டு அக்கரம்-அஷ்டாக்ஷரம் — அருள்செய்தது- கருணைபண்ணிற்று (ஆகையினால் அந்தத் திருமந்திரத்தை ஆசாரியரிடத்துப் பெற்றுக்கொள்ளக் கருதுங்கள் — எ-று. (௨௭)

அக்கர வம்புனைந் தாரய னாரிடை யாயிருநால்
அக்கர வம்பு மலராள் கொழுன னரங்கன்செங்கோல்
அக்கர வம்புயன் றன்மூ லமென்ப தறிவித்திடான்
அக்கர வம்புவி மேல்வே ழமேவெளி யாக்கியதே.

இ-ள். அக்கு - அஸ்தியையும் — அரவம் - சர்ப்பத்தையும் — புனைந்தார் - தரித்த சிவனுக்கும் — அயனார் - பிரமனுக்கும் — இடையாய் - நடுவுற்றவனாகி — இருநால் அக்கர- அஷ்டாக்ஷரத்தையுடைய — அம்புமலராள்-நீரிலுள்ளதாமரைவந்தவள் — கொழுநன்-மணாளன் — செம்-சிவந்த, கோலம் - சுந்தரமுள்ள — கரஅம்புயன்-தாமரைக்கையன், தான்மூலம்என்பது- (யாவுக்கும்) தானேகாரணனென்பதை, அறிவித்திடான்-வெளிப்படுத்தான் — அக்கரவு- அந்தமறைவை — அம்-அழகிய, ※ நீர்சூழ்ந்த ※ புவிமேல் - குவலயத்தின்கண், வேழமே-கஜேந்திராழ்வானே, வெளியாக்கியது-பகிரங்கப்படுத்தினன்-எ-று. (கரஅம்புயன்தான் மூலமென்பதறிவித்திடார் எனப்பாடமாயின்,

தாமரைக்கையனே காரணவஸ்துவெனச்சிலர் — மனதுக்குக் கரதலாமலகமென விளங்குறினும்—வெளிக் குரைக்கிலனெனப் பொருள் உரைத்துக்கொள்க.) (உஅ)

ஆக்குவித் தார்குழ லாலரங கேசரன் பால்விதுரன்
ஆக்குவித் தார வடிசிலுண் டார்கட லாடையகல்
ஆக்குவித் தாரறி வற்றேனைத்தம்மடி யார்க்கடிமை
ஆக்குவித் தாரடி யேயடி யேன்றுய்க்கு மாரமுதே.

இ-ள். குழலால் - வேய்ங்குழலால்—வேணுகானத்தினால் ※ ஆ-(சிதறிய) பசுவினங்களை—குவித்தார் - (ஓரிடத்து) திரளாகக்கூட்டியவர்—அரங்கேசர்—, விதுரன்—, ஆக்கு - சமைத்த—வித்தாரம்-மிகுந்த—அடிசில் - அமுதினை—அன்பால் - பரிவுடன்—உண்டார்-அருந்தியவர்—கடல்ஆடை - சமுத்திரமாகிய தானையை—அகலா-நீங்காத—கு - ஜெகத்துக்கு—வித்தார் - காரணர்—அறிவு அற்றேனை - புத்தி இல்லாத அடியேனையும்—தம்அடியார்க்கு - தமதுதொண்டர்களுக்கு—அடிமை ஆக்குவித்தார் - தாசனாகச்செய்தவர்—அடியே - திருவடிகளே—அடியேன்—, துய்க்கும் - புசிக்கும்—ஆர் - கிடைத்தற்கு அரிய—அமுது - தேவாமிர்தம்—எ-று. (உகூ)

ஆரா தனஞ்செய்து கண்டனின் கீர்த்தி யறைவன்றிரு
ஆரா தனஞ்செய்வன்வேதா வென்றாலடியேன்புகழ்கைக்கு
ஆரா தனஞ்செய்ய போதாந் திருமக ளாகபல்பூண்
ஆரா தனஞ்செயன் பாகா வரங்கத் தமர்ந்தவனே.

இ-ள். ஆதனம் - வீற்றிருக்கும்பீடிகை, செய்யபோதாம்-செந்தாமரைமலராகிய, திருமகள் - தாக்கணங்கு (உறையும்), ஆக-வக்ஷஸ்தலமுடையாய்—பல்பூணாரா - பகுவிதபூஷணாலங்கிருதனே, தனஞ்செயன்பாகா - பார்த்தசாரதியே—அரங்கத்து—, அமர்ந்தவனே - உற்றவனே—ஆராத - புசிக்கக்கூடாத ※ நிறையாத ※ நஞ்சு எய்து - ஆலகாலம்சேரும்—கண்டன் - மிடற்றினையுடைய சங்கரன்—நின்கீர்த்தி - உனது கல்லியாண குணங்களை — அறைவன்-கொண்டாடுவான்—வேதா - ஆரணன் — திருஆராதனம் செய்வனென்றால் - அர்ச்சனை புரிவானெனில்—அடியேன்—, புகழ்கைக்கு - (உன்னை) பரவ—ஆர் - (இவ்விருவருள்) யார்—எ-று. (௩௰)

அமர வரம்பையி னல்லார் பலரந்திக் காப்பெடுப்ப
அமர வரம்பையி வேல்வேந் தர்சூழமண் ணாண்டிருந்தோர்
அமர வரம்பையில் கான்போ யிறந்தன ராதலில்வீடு
அமர வரம்பையின் மஞ்சாரரங்கருக் காட்படுமே,

இ-ள். அமர அரம்பையில் - தேவரம்பையைக் காட்டிலும்—நல்லார் - நலமுற்றவர்—பலர் - அநந்தபாதர்— அந்திக்காப்பெடுப்ப - திருவந்திக்காப்பெடுக்கவும்— அமர - போரினையுடைய—அரம் - அரத்தினால்—பயில் - பயின்றராவப்பட்ட— வேல் - வேலாயுதத்தையுடைய—வேந்தர் - மன்னர்—சூழ - புடைதங்கவும்—மண்- இந்தப்பூதலத்தை—ஆண்டு - அளித்து—இருந்தோர் - செல்வத்துடன்) வீற்றிருந்தமண்டலேச்சுரரும்— அம்மரம் - அந்தவிருக்ஷங்களின்—வரம்பைஇல் - அவதி அற்ற—கான் - ஆரண்ணியத்திற்கு— போய் - சென்று—இறந்தனர் - மாய்ந்தார்கள்— ஆதலில் - ஆகையால்—வீடு அமர - மோக்ஷத்தில்உறைய—அரம்பையில்-கதலியில், மஞ்சு - கொண்டல்கள்—ஆர்-தங்கும்—அரக்கருக்கு - திருஅரங்கத்தையுடையவருக்கு—ஆட்படும் - தொண்டுபடுங்கள்—எ-று. (௩க)

ஆளா கவந்த வடியேற் கருள்பரி யானைதிண்டேர்
ஆளா கவந்தனிற் செற்றிலங் கேசனை யட்டவல்வில்
ஆளா கவந்தன் புயந்துணித் தாயரங் காமுளரி
ஆளா கவந்தமி லுன்னடி யார்க்கன்ப னாவதற்கே.

இ-ள். பரி - துரகங்களையும்—யானை - கஜங்களையும்—திண் -திடமுள்ள—தேர்-ரதங்களையும்—ஆள்-பதாதிகளையும்— ஆகவம்தனில்-போர்க்களத்திலே — செற்று - ஜெயித்து — இலங்கேசனை - இலங்கைக்கரசனை—அட்ட - சங்கரித்த—வல்- அடலார்ந்த—வில்லாளா-கோதண்டனே—கவந்தன் - கவந்தனென்னும் அரக்கனது, புயம்-தோள்களை—துணித்தாய்-அறுத்தவனே—அரங்கா—, முளரியாள் ஆக - கமலைமார்பனே —அந்தம்இல் - முடிவு அற்ற—உன் - தேவரீருடைய—அடியார்க்கு - தாசர்களுக்கு—அன்பன் ஆவதற்கு - நேசன் ஆகிறதற்காக—ஆளாக - அடிமையென—வந்த - நின்சரணெய்திய—அடியேற்கு—, அருள் - கருணைசெய்—எ-று. (௩௨)

ஆவா கனத்த ரடியார் மனத்துட்புள் ளானவொப்பில்
ஆவா கனத்த ரரங்கர்பொற் றாளுக் கடிமைப்படார்
ஆவா கனத்த வழுக்குடல் பேணி யறிவிழந்தவ்
ஆவா கனத்த ரிருந்தென் னிராமலென் னம்புவிக்கே.

இ-ள். அடியார் - தாசர்களது — மனத்துள் - இதயகமலத்தின்கண் — ஆவாகனத்தர் - (ஆவாகனமாய்) எழுந்தருளப்பட்டவர்—புள்ளான - (கருடப்) பறவையாகிய—ஒப்பில்லா - நிகரற்ற—வாகனத்தர் - ஊர்தியையுடையவர் — அரங்கர்—, பொன்தாளுக்கு-பொற்புற்ற பாதங்களுக்கு—அடிமைப்படார் - ஆட்படார்கள்— ஆவா - ஐயோ—கனத்த - பாரமுள்ள — அழுக்குடல் - மலக்குரம்

பையை—பேணி-பாதுகாத்து—அறிவிழந்து- மதிகெட்டு—அவா
ஆகு - (துர்விஷயங்களிலே) காமங்கொள்கிற—அனத்தர் - தூர்த்
தர்கள்—அம்புவிக்கு - நீர்சூழ்ந்தஉலகத்திலே—இருந்துஎன்-இரு
ந்துஎன்ன(பயன்)இராமல்என்-இல்லாதுஎன்ன(நட்டம்)—எ-று. ()

அம்புவி லங்கை நகர்பாழ் படச்சங்கு மாழியும்விட்டு
அம்புவி லங்கைகொண் டாயரங் காவன் றிடங்கர்பற்றும்
அம்புவி லங்கை யளித்தா யினியென்னை யாசையென்றிய்
அம்புவி லங்கையிட் டேசஞ் சிறையி லடைத்திடலே.

இ-ள். அம்புவிலங்கைநகர் - பூலோகலங்காபுரியிலுள்ளார்— பா
ழ்பட-நாசமுற—சங்கும்-பாஞ்சசன்னியத்தையும்—ஆழியும்-சுதரி
சனாழ்வானையும்—விட்டு-விடுத்து—அம்பு-வாளியும்— வில் - கோத
ண்டமும்—அம்கை-சுந்தரக்கரத்தில், கொண்டாய்-பிடித்தவனே—
அரங்கா—, அன்று-முன்னாளிலே—அம்பு - ஜலத்திலே — இடங்கர்-
கராவானது—பற்றும்-பிடித்த—விலங்கை- (விலங்குருக்கொண்டி
ருந்த) கஜேந்திராழ்வானை—அளித்தாய் - இரக்ஷித்தவனே— இனி-
இனிமேலும்—என்னை-அடியேனை—ஆசையென்று - அவாவென—
இயம்பு-சாற்றப்படுகிற—விலங்கை-தளையை—இட்டு- (என்காலில்)
பூட்டி—சம்-ஜென்மமென்னும் — சிறையில் - சிறைச்சாலையில்—
அடைத்திடல்-அடைக்காதே—எ-று. (௩௪)

இடவ மலைக்கும் புயங்க மலைக்கு மிலங்குமகல்
இடவமலைக்கு மிருங்க மலைக்கு மிறைவசங்க
இடவ மலைக்கும் புனலரங் காவெய்த்த மார்க்கண்டன்கண்டு
இடவ மலைக்கு முலகழி யாதுள் ளிருந்ததென்னே.

இ-ள். இடவமலைக்கும்-நந்திகிரிக்கும், தென்மலைக்கும்※புயங்க
மலைக்கும் - சேஷகிரிக்கும், வடமலைக்கும் ※ இலங்கும் - விளக்க
முற்ற, அகலிட அமலைக்கும் - பூமிதேவிக்கும், இரும் - பெருமை
பொருந்திய, கமலைக்கும்-பூமகளுக்கும், இறைவ-தலைவா, சங்க
இட-பாஞ்சசன்னியத்தை இடதுகரத்தேந்தினவனே, அமலைக்கும்-
ஆரவாரஞ்செய்யும், புனல்- (தென்திருக்காவேரி) நதி (பாயும்)அர
ங்கா - அரங்கநகருடையாய், எய்த்த- (பிரளயாந்தியகாலத்து உல
கெல்லாம் அழிவதைக்கண்ணுற்று)மனதிளைத்த, மார்க்கண்டன்—,
கண்டிட-(நின்உதரத்துட்சென்று) பார்க்க, அம் - (பிரளயவெள்ள)
நீர், அலைக்கும் - அழிக்கும், உலகு-புவனங்களெல்லாம், அழியாது-
சற்றுஞ்சிதையாது, உள்-(நினதுகுக்ஷி) உள்ளே, இருந்தது-தங்கி
யது, என்னே-என்னமாயமோ—எ-று. (௩௫)

இருந்தையி லங்க வெளிறு படாதென்செய் தாலுநிம்பத்து
இருந்தையி லத்தித்தி யாதவை போற்புல்லர் யாவுங்கற்றுய்ந்து
இருந்தையி லம்பன்ன கண்ணார்க் கல்லால்வெண்ணெ யில்லிலொ
இருந்தையி லங்கை யரங்கர்க்கன் பாகி யிருக்கிலரே. [ளித்து

இ-ள். என்செய்தாலும்—, இருந்தை - கரியானது, இலங்க-விளங்கத்தக்கதாக, வெளிறுபடாது - வெண்மைமேவாது—நிம்பத்து - வேப்பமரத்தினது, இரும் - (கைப்பால்) பெரிய, தையிலம்—, தித்தியாது, இன்சுவைமேவாது, அவைபோல்—, புல்லர் கயவர், யாவும்-சகலகலைகளையும், கற்று-பயின்று, ஆய்ந்துஇருந்து-ஆராய்ந்துஇருந்தும், அயில் அம்பு அன்ன-கூரியவாளிபோன்ற, (அர்த்தாந்தரம்) அயில்அம்பு அன்ன - வேலினையும்சரணயினையும் ஒத்த, கண்ணார்க்கு அல்லால்- நயனங்களையுடைய பரத்தையர்க்கு அன்றியிலே—வெண்ணெய்-நவநீதத்தை—இல்லில் - மனையில்—ஒளிந்திருந்து—, அயில்-புசிக்கும்—அரங்கர்க்கு—, அன்பாகி-நேசராகி—இருக்கிலர்-உஜ்ஜீவிபார்கள்—எ-று. (௬௬)

இருக்குமந் தத்தி லறியா வரங்கன்மண் ணேழுண்டுந்தய்
இருக்குமந் தத்திரு வாய்மலர்ந் தானெட் டெழுத்தைக்குறி
இருக்குமந் தப்புத்தி யீர்த்துநல் வீடெய்த லாகுங்கைபோய்
இருக்குமந் தச்செவிட் டூமன்முந் நீர்கடந் தேறிடிலே.

இ-ள். இருக்கும்-ஆரணங்களும் — அந்தத்தில் - முடிவிலே — அறியா-ஓர்தற்கெட்டா—அரங்கன்—, மண்ணேழ் - சப்தலோகங்களையும்—உண்டு-கபளீகரித்தும்—தயிர்க்கும்-ததிக்கும்—அந்தம்-சுந்தரங்கிளரும்— திருவாய்—, மலர்ந்தான்-அங்காந்தவன்—(அவனது) எட்டெழுத்தை-அஷ்டாக்ஷரத்தை—குறியிருக்கும் - சிந்திக்காதஉங்களுக்கும்—மந்தப்புத்தி-கூர்மையற்றஅறிவினை—ஈர்த்து-அறுத்து—நல்-நல்ல—வீடு-மோக்ஷத்தை—எய்தலாகும்-அடையக்கூடும்—கைபோயிருக்கும்-கரங்கள் அற்றுப்போன — அந்தச்செவிட்டூமன் - குருடும்செவிடும்கலந்த ஓர்மூகையானவன்—முந்நீர்கடந்து - (சப்தமகா) சமுத்திரங்களையும்தாண்டிப்போய்—ஏறிடில்-அக்கரையேறுவானெனில்—எ-று. (௬௭)

ஏறுங் கரியும் பரியுஞ்செற் றான்பர னென்றுமன்றுள்
ஏறுங் கரிமறை யாதலி னாலையம் யாதுமக்கிடு
ஏறுங் கரிய வரங்கர்க்கன் பாய்வினை யென்னுமிடி
ஏறுங் கரியு மினிமேற் பிறவி யிடரில்லையே.

இ-ள். ஏறும் - (கஞ்சன்உந்திய) விடையையும் — கரியும்-வேழத்தையும்—பரியும் - அசுவத்தையும்—செற்றான்-சங்கரித்த

வனே—பரனென்று - பரத்துவப் பொருளென—மன்றுள்ளாறும்-அவையேயறியுரைக்கும்—கரி-சாட்சி—மறையாதலினால்- ஆரணமாகையினால்—உமக்குயாதுஜயம்- உங்களுக்கென்னசங்கை—கரிய-காளமேகநிறத்த, அரங்கர்க்கு—, அன்பாய்-நேசராய்—ஈடேறுப்-கனாயேறுங்கள்—வினையென்னும் இடிஎறும்-பூர்வகன்மமாகிய இடியும்—கரியும்-கரிந்துபோம்— இனிமேல்-அநந்தரம்—பிறவிஇடர் இல்லை-பவநோய் இல்லையாம்.—எ-று. (௫௮)

இடரா கவந்தென்னைப் புன்சிறு தெய்வங்க ளென்செயுமான்
இடரா கவன்பிணி மாநா கமென்செயும் யான்வெருவி
இடரா கவன்னி புனலிடி சோண்மற்று மென்செயும்வில்
இடரா கவன்னரங் கன்றிருத் தாளென் னிதயத்ததே.

இ-ள். வில்இட-(சார்ங்கத்) தனுவை இடதுகரத்தேந்திய—ராகவன் - ரகுவம்சத்துதித்தவன், அரங்கன்—, திருத்தாள்-திருவடிகள், என் - அடியேனது—இதயத்தது-மனத்தின்கணுற்றன—(ஆதலால்இனி) இடர்ஆக-துன்பம்விளையத்தக்கது ஆக—வந்து - நெருங்கி. என்னை—, புன்சிறுதெய்வங்கள் - ஈனமுள்ள அற்பதேவதைகள்—என்செயும் - யாதுசெய்யமாட்டுவன—மானிடர் - நரர்களது—ஆகவன்பிணி - யாக்கையில் (குடிகொள்ளும்) கொடியநோய்களும்—மாநாகம்- மகாசர்ப்பமும்—என்செய்யும்-யாதுசெய்யமாட்டுவன, யான்-நான்--வெருவிஇட - நடுக்கம்கொள்ள—ராகம் - செக்கர்நிறத்த—வன்னி-தழலும்—புனல்-உதகமும்—இடி - அசனியும்—சோள்-நவக்கிரகமும்—மற்றும்-இன்னும் (பொல்லாங்குசேய்வன) யாவும்—என்செயும்-யாதுசெய்யமாட்டுவன--எ-று. (௫௯)

அத்திரங் காய மெனவுண ரேனென தாசையுன்கை
அத்திரங் காயத்தி யிற்பெரி தானரை யாகிப்பல்வீழ்
அத்திரங் காயந் திரம்போற் பொறியைந் தழியுமக்கால்
அத்திரங் காயரங் காவடி யேனுன் னடைக்கலமே.

இ-ள். காயம்-யாக்கை—அத்திரம்என- நிலையற்றது என்று—உணரேன்- ஓர்கிலேன்—எனது-அடியேனது—ஆசை-அவாவோ—நின்-உனது—கை-பாணியால் பிரயோகஞ்செய்த—அத்திரம் - வாளி—காய்-தகித்த—அத்தியில் - ஆழியிலும்—பெரிது - மிக்கது—நரைஆகி-பலிதமெய்தி—விருத்தம்புக்கு * பல்வீழ-தந்தங்கள் உகுதலைச்செய்ய—திரங்கா-திரைந்து—யந்திரம்போல் - (சூத்திரம் அற்ற) மரப்பாவையென்ன—பொறிஐந்தும்-பஞ்சேந்திரியங்களும், அழியும்அக்காலத்து-வீயும்போது— இரங்காய்-இரக்கமுற்றளிப்பா

ய், அரங்கா—, அடியேன்—, உன் அடைக்கலம்-நினது சரண்புக்கேன்—எ-று. ஆல்-அசை. (௪௰)

கலக்கூ ழைக்கைக்குங் கருத்துடை யீரரங் கத்துளிலைக்
கலக்கூ ழைக்கைக்குங் கறியிட்டுத் துய்த்திருங் காதுபடைக்
கலக்கூ ழைக்கைக்குள் வருவா ணனைக்கண் ணுதலும்விட்ட
கலக்கூ ழைக்கைக்குப்பை கண்டா னைவீதியிற் கண்டுவந்தே.

இ-ள். கலக்கு-(மனதை) மறுகுதலுறச்செய்யும்—ஊழை-பூர்வகன்மத்தை—கைக்கும்-அலைக்கும்—கருத்துடையீர்-நினைவுற்றிருப்பீர்கள்—காது-(ஒன்றனைச்) சங்கரிக்கும்—படைக்கலம்-ஆயுதங்களையுடைய—கூழை-படைவகுப்பின்—கைக்குள்-ஒழுங்கினுள்ளே—வருவாணனை-வரப்பட்டவாணாசுரனை—கண்ணுதலும்-பாலலோசனனும்—விட்டு-கைவிட்டு—அகல-ஒழிய—கூழைக்கை-(அவனது) குறைபட்டகரங்களின்—குப்பை-குவாலினை—கண்டானை-(வீழ்த்துக்) கண்ணுற்றவனை—வீதியில்-திருவீதியில்—கண்டு-(பவனிவர) தரிசித்து—உவந்து-அகங்களித்து—இலைக்கலம்-பத்திரமாகிய பாத்திரத்துள்—கூழை-அன்னத்தை—கைக்கும்-கசப்புடைய—கறி பதார்த்தங்களை—இட்டு-சேர்த்துக்கொண்டு—துய்த்து-உண்டு—இரும்-இருங்கள்—அரங்கத்துள்-திருவரங்கம் பெரிய கோயிலிலே—எ-று. (௪௧)

கண்டக னாவின் பொருள்போ லயாவும்பொய் காலனென்னுங்
கண்டக னாவி கவர்வதுவேமெய் கதிநல்கெனக்
கண்டக னாவிப் பொழுதே செல்கென் றருள் காரரங்கன்
கண்டக னாவின் புறக்கண்டு வாழ்த்திக் கடிதுய்ம்மினே.

இ-ள். கனாவின்-சொப்பனத்தில்—கண்ட-பார்த்த—பொருள்போல-வஸ்துக்களென்ன—யாவும்-(சாக்கிரத்திற்காண்பன) அனைத்தும்—பொய்-மித்தையே—காலன்என்னும்-அந்தகன் என்றிசைக்கப்படும்—கண்டகன்-கோரமுள்ளவன்—ஆவி-ஆன்மாவை—கவர்வதுவே-இழுத்துக்கொண்டேகுதலே—மெய்-சரதம்—(ஆதலினால்) கதி-வைகுந்தத்தை—நல்கு என-(அரங்கனபிதானஞ் செவியுறுவணம் காதில்கண்டையணிந்துகொண்டே திரிந்த கண்டாசுரன்—எனக்கு) தாஎன்றுகேட்க—, கண்டகனா-கண்டாகனனே, இப்பொழுதே-இந்தக்ஷணமே, செல்கஎன்று-அடைவாயாக என்று சொல்லி—அருள்-அளித்த—கார்-(படிவத்திலும் கைம்மாறுகருதாதளிக்கும் நீர்மையிலும்) பயோதரமன்ன—அரங்கன்—, (அவனை) கடிது-ஒல்லையிலே—கண்-நேத்திரங்களுக்கு—தக-பாங்குபெற

கண்டு-தரிசித்தும்—நா-ஜிகுவைக்கு, இன்புற-இரதமுண்டாக—வாழ்த்தி-ஸ்துதிசெய்தும், உய்ம்மின்-உஜ்ஜீவியுங்கள்—எ-று. (சஉ)

கடிக்கும் பணிநஞ் சமுதா குந்தீங்குநன் காகும்பராக்
கடிக்கும் பணியலர் தாழ்வார் கல்லாமையுங் கற்றவையாங்
கடிக்கும் பணியற மெல்லா மரங்கர்பைங் கன்னித்துழாய்க்
கடிக்கும் பணியொளிக் குந்நல்ல பாதங் கருதினர்க்கே.

இ-ள். அரங்கர்—, பை-சாமளநிறம்பொருந்திய—கன்னித்துழாய்-மஞ்சுளவனமாலையின்—கடிக்கும்-மணத்துக்கும்—பணி ஒளிக்கும்-நூபுரஜோதிக்கும்—நல்ல-நன்கமர்ந்த—பாதம்-திருவடிகளை—கருதினர்க்கு-மனனஞ்செய்தவர்க்கு—கடிக்கும்—, பணி உரகத்தினது—நஞ்சு-விடமும்—அமுதாகும்-தேவாமிர்தம்ஆம்—தீங்கு-தீவினையும்—நன்காகும்-நல்வினையாம்—பராக்கடிக்கும்-அவமதிக்கும்—பணியலர்-பகைஞரும், தாழ்வார்-பணிவார்கள்—கல்லாமையும்-பயிலாதவிஷயங்களும்—கற்றமையாம்-பயின்றன போல்விளங்கும்—பணி-தாம்புரிந்த—அறம்-தருமம்—எல்லாம்) யாவும்—கடிக்கும்-(தவறுதலின்றி) காக்கும்—எ-று. (சங—

தினகர ஞர்கலி தீகாற் றொடுங்குஞ் செயலும்விண்மீ
தினகர ஞர்கொண்ட லேழ்செருக் காமையுஞ் சென்றெதிர்மோ
தினகர ஞருயிர் செற்றா ரரங்கர் திகிரிசங்கேந்
தினகர ஞர்நம் பெருமா ளமைத்த திருக்கைகண்டே.

இ-ள். தினகரன்-திவாகரன்—ஆர்கலி-அப்பு—தீ-தேயு—காற்று, வாயு—(இவைகளெல்லாம்) ஒடுங்கும்-(தத்தம்எல்லைஇகவாது) அடங்கியிருக்கும்—செயலும்-காரணமும்—விண்மீதில்-அந்தரமிசை—நகரன்-பொன்னகர்க்கிறைவன் (ஆக்கினையுட்பட்ட), ஆர்-நிறைந்த—கொண்டலேழ்-சப்தமேகங்களும்—செருக்காமையும்-தருக்காததும்,) யாதுகாரணத்தாலெனின்) சென்றுஎதிர்-நேராக வந்து—மோதின-எற்றின—கரன்-கரனென்னும்அரக்கனது, ஆர்-(அவனுக்கு) அருமையான—உயிர்-ஆவியை—செற்றார்-(உடலில் நின்றுநீங்க) கோபித்தவர்—அரங்கர்—, திகிரி-சுதரிசனாழ்வானையும்—சங்கு-பாஞ்சசன்னியத்தையும்—ஏந்தின-பிடித்த—கரனார்-அஸ்தத்தையுடையவர்—நம்பெருமாள்—, அமைத்த-(நில்லென்று) குறித்த—திரு-சிறப்புற்ற, கை-கரத்தை, கண்டே-பார்த்துத்தான்.()

திருக்கா விரிக்கும் யமுனைக்குங் கங்கைக்குந் தெள்ளமுதாந்
திருக்கா விரிக்குங் கடற்கும் பிரான்றென் னரங்கமென்னத்
திருக்கா விரிக்கு மொழியார்க் குத்தீமெழு காவிரன்புய்த்
திருக்கா விரிக்கும் தெவ்வா றவனுங்கள் சென்மத்தையே.

இ-ள். திரு - சுந்தரந்திகழும் - கா - நந்தனவனங்களை — விரிக்கும் - (அவைவழிபாய்த்தவழ்ந்து)பூத்திடச்செய்யும்— யமுனைக்கும் கங்கைக்கும் - யமுனாநதி சங்காநதியைக்காட்டிலும் — தெள்-தெளிவுற்ற —அமுது - அமிழ்தன்ன—ஆம் - நீரினையுடைய—திருக்காவிரிக்கும் - தென்றிருக்காவேரிக்கும்—கடற்கும் - க்ஷீரசாகரத்துக்கும்—பிரான்-ஸ்வாமியினது—தென்-க்வின்பெற்ற—அரங்கம் என்ன - என்று (ஓர்தரமேனும்) இயம்ப—அன்பு - காதல் — உய்த்து இருக்கா - செலுத்தியிராமல்—திருக்குஆவிர் - முடக்குஆவீர்கள், இக்கு - கன்னலன்ன—மொழியார்க்கு- (இனிய) வசனங்களையுடையமாதரிடத்து —தீ- தழலுற்ற—மெழுகுஆவிர் - மெழுகுபோலனைந்துருகுவீர்கள்— (ஆகையால்) அவன் - அந்தச்சர்வேசுரன்—உங்கள் - நுமது—சென்மத்தை - பவத்தை—இரிக்குமது - நீக்கும்வண்ணம்—எவ்ஆறு - எங்ஙனம்—எ-று. (௪௫)

சென்மந் தரங்கக் கருமஞ் சுழிபிணி சேலினங்கு
சென்மந் தரங்கதிர் பொன்கோள் கண்மாரிதிண் கூற்றசனி
சென்மந் தரங்கவற் றுள்விழு வோர்களை சேர்க்கும்வங்கஞ்
சென்மந் தரங்கவின் றோளா ரரங்கர் திருப்பதமே.

இ-ள். சென்மம்தரங்கம் - சனனமாகிய சாகரத்துள்—கருமம் சுழி-இருவினையாகியசுழலில்—பிணிசேல்இனம் - நோயாகிய மச்சக்குலங்களினாலும் — குசென் - செவ்வாய்—மந்தர் - சனி—அம்கதிர் - எழில்பொருந்தியபானு—பொன்-வியாழம்—(முதலாகிய) கோள்கள் - கிரகங்களாகிய—மாரி - மழையினாலும்—திண் - வலியுடைய—கூற்று-சண்டனென்னும்—அசனி - இடியினாலும்—செல்-வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிற—மந்தர்-புத்திக்கூர்மையில்லாதவரையும்—அங்கு- அந்தப்பவாப்தியுள்ளும்—அவற்றுள் - பிற்கூறியவற்றுள்ளும்—விழுவோர்-இனிமேல்வீழ்பவரையும்—களைசேர்க்கும்-கரையேற்றும்—வங்கம்-நாவாய், செல்-மேகங்கள்தவழும்,மந்தரம்-மந்தரகிரிபோல்—கவின்-பொலிவுடைய—தோள்ஆர்- வாகுகள்பொருந்திய—அரங்கர்-அரங்கரது,திருப்பதமே- திருவடியே()

பதக்க மலங்க லணிமார்ப பொன்னி படிந்திமையோர்
பதக்க மலங்க ளருசீ ரரங்க பகட்டயிரா
பதக்க மலங்கரித் தூர்வோன் சிவனயன் பார்க்கவந்துன்
பதக்க மலங்க ளடியேன் றலைக்கென்று பாலிப்பதே.

இ-ள். பதக்கம் - ஆரங்களையும்—அலங்கல் - தாமங்களையும்—அணி-புனையும்—மார்ப - நிறமுடையாய்—அகலமுடையவனே ※ பொன்னி தென்திருக்காவேரியில்—படிந்து - தோய்ந்து—இமை

யோர் - இமையா நாட்டத்துவானவர்—பதக்கம்- பாதங்களையும்—மலங்கள் - தோஷங்களையும்—அறு - நீங்கும் — சீர்அரங்க-சிறப்புற்றஅரங்கநகருடையாய்—அயிராபதப்பகட்டு-வெள்ளைவாரணத்தின்— கம்-மத்தகத்தை— அலங்கரித்து - சிங்காரஞ்செய்து—ஊர்வோன்-கடாவுகிறஆயிரங்கண்ணனும்—சிவன்- முக்கண்ணனும்—அயன்-எண்கண்ணனும்—பார்க்க-காண—வந்து - மேவி- உன்னினது —பதக்கமலங்கள் - சரணாரவிந்தங்களை—அடியேன்—,சிரத்து-சென்னியில்—-பாலிப்பதுஎன்று - இருத்துவதென்றோ.()

பாலனஞ் செய்யமர் நாடாண் டுபூணொடு பட்டணிந்து
பாலனஞ் செய்ய கலத்துண்டு மாதர்பல் போகத்தையும்
பாலனஞ் செய்ய விருப்பதி லையம் பருகிநந்தன்
பாலனஞ் செய்யவள் கோமா னரங்கம் பயில்கைநன்றே.

இ-ள். பால்-வெண்ணிறத்த—அன்னம்-ஓதிமப்பறவைகள்—செய்-பணைகளில்—அமர்-பொருந்தியிருக்கிற, நாடு-வண்மைபொருந்தியநிலத்தை—ஆண்டு - புரந்து —பூணொடு- சகலபூஷணங்களோடு —பட்டு-பட்டுவர்க்கங்களையும்— அணிந்து-தரித்து- பாலன்னம்-க்ஷீரான்னமும் - செய்ய-நேர்மையுற்ற, கலத்து-பாத்திரத்துள், உண்டு-நுகர்ந்து —மாதர்பல்போகத்தையும்-பெண்முதலாகிய அஷ்டபோகங்களையும் —பாலனஞ்செய்ய - பரிபாலிக்க—இருப்பதில்-இருக்கிறதிலும்—ஐயம்-யாசித்ததை—பருகி - அருந்தி— நந்தன்-நந்தகோபனுக்கு —பாலன்-மதலை—அம் - அழகிய—செய்யவள்-பூமகள்—கோமான் - நாயகனது—அரங்கம்- திருவரங்கத்திலே—பயில்கை-ஸ்தலவாசஞ்செய்தல்— நன்றே-மிக்கதே. (௨௮)

பையிலத்தி மூளை நரம்பூ னுதிரம் பரந்தகுரம்
பையிலத்தி யுள்விளை பாண்டமென் னுமற்புன் பாவையர்தோற்
பையிலத்தி செய்து நரகெய்து வீருய்யப் பற்றுமினோ
பையிலத்தி மேவித் துயில்கூ ரரங்கர்பொற் பாதத்தையே.

இ-ள். பயில்-(ஒன்றோடொன்று) பொருந்தியிருக்கும்— அத்தி-எலும்பு—மூளை—, நரம்பு—, ஊன்-தசை—உதிரம்—இரத்தம்—பரந்த-பரவிய—குரம்பை-சடலத்தை—இலத்தி-மலம்—உள் - அகத்திலே—விளை-உண்டாகும்— பாண்டம் - பாத்திரம் —என்னுமல்-என்றுநினையாமல்—புன்-இழிவுடைய—பாவையர்- பரத்தையரது, தோல்பையில் —, அத்திசெய்து- (இன்பானுபோகத்திலே) சோலைசெய்து—நரகுஎய்துவீர்-அதோகதிஅடைபவரோ—உய்ய-பிழைக்க—பற்றுமின்-குறியுங்கள், பயில்-கம்பலைபொருந்திய, அத்தி-சமுத்

ராப்தியுள், மேவி-சேர்ந்து, துயில்கூர்-அறிதுயில்அமர்ந்த, அரங்கர்—, பொன்பாதத்தையே-பொலிவுற்றதிருவடிகளையே—எ-று.()

பாதகங் கைக்கு மரங்கர்பல் பேய்பண் டிராவணனுற்
பாதகங் கைக்குமென் றெள்ளக்கொய் தார்படிக் கேற்றதிருப்
பாதகங் கைக்குள் விழுமுன்ன மேபங்க யன்விளக்கும்
பாதகங் கைக்குளிர் நீர்வீழ்ந் ததீசன் படர்சடைக்கே.

இ-ள். பாதகம்-(அடியார்களது) பாவங்களை, கைக்கும்-அலைக்கும்—அரங்கர்—, பல்பேய்-பல அலகைகள்—பண்டு-முன்னாளில், இராவணன்-இராவணாசுரனது—உற்பாத- ஆச்சரியமான—கம்-சிரங்களை—கைக்கும்என்று-கசக்குமென—எள்ள - நிந்திக்க—கொய்தார்-துணித்தவர்—படிக்கு-உலகுக்காக—ஏற்ற-இரந்த—திருப்பாத-(கொடுத்ததை) திருப்பக்கூடாத—கம்-ஜலம்— (அதாவது தாரை நீர்) கைக்குள்-அஸ்தத்திலே—விழுமுன்னமே - வீழ்தற்குமுன்னமே—பங்கயன்-அம்புயன்—விளக்கும் - அலம்பும்—பாதகங்கை-திருவடிக்கண்பிறந்தமந்தாகினியின்—குளிர் - தட்பமுள்ள— நீர்-உதகமானது—ஈசன்-சங்கரனது—படர்-பரவிய—சடைக்கு-குடிலத்திலே—வீழ்ந்தது-விழுந்தது—எ-று. (௫௰)

படநா கத்தந்தர மீதிருப் பானெம் பரனரங்கன்
படநா கத்தந்தம் பறித்தோன் புகழைப் பரவுமின்க
படநா கத்தந்தக் கரணம்பொல் லான்சிசு பாலன்முற்பல்
படநா கத்தந்த வசைக்குந்தந் தான்றொல் பரகதியே.

இ-ள். படம்-(ஸஹஸ்த்ர) பணாமுடிகளையுடைய—நாகத்து-திருவனந்தாழ்வானில்—அந்தரமீது-விண்மிசை—இருப்பான் - தங்குமவன்—எம்பரன்-எமதுபரத்துவப்பொருளானவன், அரங்கன்—, நாகம்-வேழத்தினுடைய—தந்தம்-கோட்டினை—பட-(அது) வீய, பறித்தோன்-கல்லினவன்—புகழை-(அவனுடைய) கல்யாணகுணங்களை—பரவுமின்-கொண்டாடுங்கள்—கபடன் - வஞ்சகன்—ஆகத்து-யாக்கையுள்—அந்தக்கரணம்—,பொல்லான்-(நான்கும்)தீங்குற்றவன்—(ஆகிய) சிசுபாலன்—, முன்-பண்டு—பல்பட - பகுவிதமாக—நா-ஜிகுவையினால்—கத்து - பிதற்றிய — அந்தவசைக்கும்-அவ்விகழ்ச்சிச்சொற்களுக்கும்—தொல்-பழைமையுற்ற— பரகதி-சிரேஷ்டமானமோக்ஷத்தை—தந்தான்-ஈந்தான்—எ-று. (௫௧)

பரவையி லன்னகட் பாஞ்சா லிநின்பர மென்னதிரு
பரவையில் மேகலை யீந்தா னரங்கன் பணிந்திமையோர்
பரவையி லாழிப் பிரானடிக் கீழுற் பவித்தழியும்
பரவையில் மொக்குளைப் போற்பல கோடி பகிரண்டமே.

இ-ள். பரவு - அகன்ற—அயில் அன்ன - வேல்போன்ற—கண் - விழிகளையுடைய—பாஞ்சாலி- துரௌபதை, நின்பரம்என்ன-(என்னைக்காப்பது உன்பாரம்என்றுமுறையிட—நிருபர்-வேந்தர்கள்—அவையில் - சங்கத்தில்—மேகலை - (கலையக்கலையவளர்ந்துகொண்டேவந்த) துகிலை — ஈந்தான் - அளித்தவன்—அரங்கன்—,(அவனை) இமையோர்-உம்பர்கள் —பணிந்து-தாழ்ந்து, பரவையில்-ஸ்தௌத்தியஞ்செய்துகொண்டே யிருக்கையில் — ஆழி - சக்கரத்துக்கு ❊ க்ஷீரசிந்துக்கு ❊ பிரான்-ஸ்வாமியினது—அடிக்கீழ் - பாதங்களின் கீழ்—பரவையில் - தெண்டிரையிலுதிக்கும்—மொக்குளைப்போல்-புற்புதமென்ன—பலகோடி - அநந்தங்கோடி—பகிரண்டம்—, உற்பவித்து - தோன்றி—அழியும் - மாய்ந்துபோம்—எ-று. (௫௨)

அண்ட மடங்கலை யுந்தந்து காத்தவை யந்தந்தன்பால்
அண்ட மடங்கலைச் செய்கா ரணமம்பொன் முத்தலைவான்
அண்ட மடங்கலை யீர்த்தோ டும்பொன்னி யரஙகன்புட்காா்
அண்ட மடங்கலை முந்நீர் மகளுகப் பாகவென்றே.

இ-ள். அம் - சுந்தரமான—பொன் - சொன்னமும்—முத்து- திரளமும் (கொழிக்கும்), அலை-திரைகள்—வான் அண்ட - மேகமண்டலத்தை அளாவிட—மடங்கலை-கண்டீரவங்களை—ஈர்த்தோடும்- இழுத்துக்கொண்டு ஓடிவராநின்ற—பொன்னி-காவிரி(சூழ்ந்த)—அரங்கன்—; அண்டம் அடஙகலையும் - அகிலாண்டங்களையும்—தந்து-சிருஷ்டித்து—காத்து-அளித்து—அவை - (மீண்டும்) அவையாவும், அந்தம் - கடையில்—தன்பால் - தன்னிடத்து—அண்டு-ஒடுங்கும், அம்மடங்கலை - அந்தஊழிகாலத்தை—செய்- உண்டாக்கும்—காரணம்-எது (யாதுஎனில்)—புள்-பறவையாகிய —காரண்டம்- நீர்க்காக்கை—மடங்கு-முடங்கியசைந்துகொண்டேயிருக்கும்— (அன்றிக்கே) அடங்கு-அடங்கியிருக்கிற—அலைமுந்நீர் - தரங்கவாரிதியுதித்த—மகள்திருமகள்—உகப்பாகஎன்றே-களிப்பெய்தத்தான்.(௫௩)

ஆக மதிக்கு முக்மேன் முகமுடை யானயன்வாழ்
ஆக மதிக்கு நவநீ தக்கள்வ வவனிகொள்வார்
ஆக மதிக்குளஞ் சேரரங்கா வுன்னை யன்றித்தெய்வம்
ஆக மதிக்குளெண் ணேனடி யேன்பிற ராணாயுமே.

இ-ள். ஆகம- ஆகமவிதிகளுக்கிறைவனே—திக்குமுகம் - நான்குமுகஙகளுக்கு —மேல்-மேலும்—முகமுடையான் - ஒருமுகமுடையசிவனும்—அயன்-பிரமனும்—வாழ்-உறையும்—ஆக-மேனியாய், மதிக்கும்-கடைந்தெடுக்கும்—நவநீதக்கள்வ - நவநீதசோரா—அவனி-பூமியை —கொள்-(நுதிக்கோட்டில்) கொண்ட—வாராக - கேழலாயுற்றவனே —மதிக்குளம்-சந்திரபுஷ்கரணி—சேர்- கூடின—அ

ரஙகா அரஙகநகருடையாய்—உன்னை அன்றி - நின்னையல்லாது, அடியேன்—, பிறர்ஆறையும்-வேறேஒருவனாயும்—தெய்வமாக-தேவென—மதிக்குள்-மனத்தில்—எண்ணேன்-கருதேன். (ருச)

ஆரத் தநந்தருந் தாய்தந்தை யாநந்த மாவரிகழ்
ஆரத் தநந்தனன் றீமைகண் டாலங் கவுத்துவபூண்
ஆரத் தநந்த சயனு வணியரங சாதிகிரி
ஆரத் தநந்தன் மதலா யென்றீங்குனக் சத்தன்மைத்தே.

இ-ள். ஆர - பானஞ்செய்ய—தனம்தரும்- முலைகொடுக்கும்—தாய்-அன்னையும்—தந்தை-தாதையும்—அத்தம்- அந்தத்தமது—நந்தனன்-புதல்வனது—தீமை-(தம்மை உதைத்தல் ஏசல் இவைமுதலிய) தீஙகுகளை—கண்டால் - கண்ணுறில்—ஆனந்தமாவர்- பூரிப்புக்கொள்வர்—இகழார் - (அக்குற்றஙகளுக்காகச்சற்றும்) நிந்தித்திடார்கள்—அம்-சுந்தரமான—கவுத்துவபூணாரத்து- கௌஸ்துவாபரணமுடைய—அநந்தசயனு-சேஷிசாகி, அணி-எழில்பெற்ற, அரங்கா—திகிரி-நேமி—ஆர்-பொருந்திய—அத்த-கரத்தோய்—நந்தன்மதலாய்-நந்தனந்தனனே—என்தீங்கு - எனதுபிழைகளும்—உனக்கு—, அத்தன்மைத்து-அங்ஙனம்தான்—எ-று. (ருரு)

அத்தனு மன்புள வன்னையும் பேருமனந்தமதாம்
அத்தனு மன்புலனுதலி னுண்டரு ளம்புயைவீர்
அத்தனு மன்புய மீதே றரங்கனஞ் சார்ங்கவயிர்
அத்தனு மன்புகல் பேரிரு வீர்க்கு மடியனென்றே.

இ-ள். அத்தனும்-தந்தையும்—அன்புள-ஆசையுடைய—அன்னையும்-தாயும்—பேரும்- நாமமும்—அநந்தமதாம்- அவதியற்றதாகிய, அத்தனு-அவ்வவ்வுடல்களிலும், மன்பொருந்திய-புல்லன்-கயவன், ஆதலின் - (யான்) ஆகையால்—அம்புயை-நளினை—வீரத்து-(புஜபல) பராக்கிரமமுடைய—அனுமன் - சிறியதிருவடியின்—புயமீது-தோண்மேல்—ஏறு-எழுந்தருளும், அரஙகன்—, அம்-சுந்தரமான, சார்ங்க-சார்ங்கமென்னும்—வயிரப்-சேசேறிய—தனு - கோதண்டத்துக்கு—மன்-இறைவன்—(என்று)புகல்-பகரப்படும்—பேரிருவீர்க்கும்-பெருமையுற்றஉம் இருவர்க்கும்—அடியனென்று—, ஆண்டருள்-(நீ என்னை) காத்தருள்—எ-று. (ருசா)

அடியவ ராகவு மாட்கொள் ளவுமெண்ணி யாருயிர்கட்கு
அடியவ ராகம் படைத்தமை யாலக மேபெரிய
அடியவ ராக வரங்கருக் காட்செ யருட்கதையால்
அடியவ ராகஞ்செய் மாரனுக் காட்செயு மைவனாயே.

இ-ள். அடியவர்ஆகவும்- தொழும்பர்களாகவும்—ஆட்கொள்ளவும் - (அங்ஙனம்ஆமவரை) அடிமைகொள்ளவும்—எண்ணி-உன்னி—ஆர்-நிறைந்த—உயிர்கட்கு-சேதனங்களுக்கு—அடிஅவர்- ஆதிகாரணமாயினர் அவர்—ஆகம்படைத்தமையால்-மனிதசரீரத்தை நீகொண்டதினாலே—அகமே-நெஞ்சே, பெரிய—, அடிய - கால்களையுடைய—வராகம்-ஏனமாயவதரித்த, அரங்கருக்கு—, ஆட்செய்-தொண்டுபூண், (பூண்டு) அருள்-(அவரது) அளியென்னும்—கதையால்-தண்டாயுதத்தினால்—அவம்-பயனற்ற—ராகம்- காமத்தழலை—செய் -மூட்டுகிற—மாரனுக்கு - அநங்கனுக்கு—ஆட்செயும் - பணிவிடைபண்ணும்—ஐவரை - பஞ்சேந்திரியங்களையும்—அடி- மோது—எ-று. (௫௭)

வளையாழிவண்ண ரரங்கேசரீசன்முன் வாணன்றிண்டோள்
வளையாழியார்புள்ளின் வாகனத்தேவந்த நாட்டொடிற்றை
வளையாழியதுய ராய்த்துகினாணு மதியுஞ்செங்கை
வளையாழியும்வளை யும்மிழந் தாளென் மடமகளே.

இ-ள். வளை - (கண்டவர்மனத்தை) கவர்ந்துகொள்ளும்—ஆழி-கருங்கடலன்ன—வண்ணர்- திருமேனியையுடையவர்—அரங்கேசர்—, ஈசன்முன்-நக்கபிரான்முன்னர்—வாணன்- வாணாசுரனுடைய—திண்-விறலுற்ற—தோள்-வாகுகளை—வளை - அறுத்தொழிக்கும்—ஆழியார்-நேமியையுடையவர்—புள்ளின்வாகனத்தே-கருடவாகனத்தேறி—வந்த-பவனிநடாத்திவந்த—நாள்தொட்டு - நாள்தொடங்கி—இற்றைவளை-இதுகாறும்—ஆழியதுயராய் - ஆழ்ந்தமனவியாகுலமெய்தி—துகில்-துகிலும்—நாணும்- சமழ்ப்பும்—மதியும்-அறிவும்—செங்கை-செய்யகரத்து—வளை- ரேகைகளையுடைய—ஆழியும்-மோதிரமும்—வளையும்-சூடகமும்—இழந்தாள்- அற்றனள், என்—, மடமகள்-முக்தையானபெண்—எ-று. (௫௮)

மகரந்த காதலை வாழ்வென்ன வாரிசுட் டாய்திதிதன்
மகரந்த காதலை வானினுள் ளோர்க்குமண் ணோர்க்குவட்டா
மகரந்த காதலை வார்குழை யாய்வளர் சீரங்கதா
மகரந்த காதலை வாக்கிற்சொல் லேன்மடவாரொதிரோ.

இ-ள். மகரம்-சுறாக்கள்—அலைவாழ்வு-கடல்வாழ்க்கை—தகாதென்ன - இனிக்கூடாதெனத்தக்கதாக—வாரி-மகராலயத்தை—சுட்டாய்-தகித்தவனே—திதிதன்மகர் - திதிசுதர்களுக்கு—அந்தகா - காலனே—தலை-முதன்மைபெற்ற—வானிலுள்ளோர்க்கு - வானவர்க்கும்—மண்ணோர்க்கு - மானவர்க்கும்—உவட்டாமகரந்த - தெவிட்டாததேனே, காது-கன்னத்திலே—அலை-திவளாநின்ற—வார்- நெ

டிய — குழையாய்-குண்டலங்களைத் தரித்தவனே — வளர்-(திருமுத லியவளங்கள்) தழைக்கும் — சீரங்கம்-திருவரங்கமென்னும் — தாம-திவ்விய க்ஷேத்திரத்தையுடையவனே — கரந்த - (நின்மேல்) கரவுற்றிருக்கும் — காதலை-மோகத்தை — மட வார்எதிரே-(நான்கு) பெண்கள்முன்னர் — வாக்கில்-வாக்கினால், சொல்லேன் — எ-று. (௫௯)

வாரா கவாமன னேயரங் காவட்ட நேமிவல
வாரா கவாவுன் வடிவுகண் டான்மன் மதனுமட
வாரா கவாதரஞ் செய்வனென் றாலுய்யும் வண்ணமெங்கே
வாரா கலாச முலையே யனைப்போலுள்ள மாதருக்கே.

இ-ள். வாராக - கேழலெனச்சூழல் கொண்டவனே — வாமனனே-மாணிக்குறளுருவா, அரங்கா —, வட்டநேமி-சக்கராகாரமான திருவாழியாழ்வானை — வலவா- வலதுகரத்துடையாய் — ராகவா-ரகுவம்சத்துதித்தோய் — உன்-நினது — வடிவு-சுந்தரமூர்த்தியை — கண்டால்- கண்ணுற்றால் — மன்மதனும் - காமனும் — மடவார்ஆக-மாதராய்ப் பிறக்க — ஆதரஞ்செய்வன்என்றால் - காமுறுவானெனில் — ஆகம்-மார்பிலே — வார்-கச்சும் — வாசம்-மணமும் பொருந்திய - முலையேயனைப்போலுள்ள-பயோதரங்களையுடைய என்னைப்போலுற்ற — மாதருக்கு-பெண்களுக்கு — உய்யும் - பிராணனுற்றிருக்கும் — வண்ணம்-விதம் — எங்கே-யாங்ஙனம் — எ-று. (௬௰)

மாதம்பத் துக்கொங்கை யும்மல்குற் றேரும் வயிறுமில்லை
மாதம்பத் துக்குறி யுங்கண்டி லேம்வந்து தோன்றினைபூ
மாதம்பத் துக்கெதிர் மார்பா வரங்கத்து வாழ்பரந்தா
மாதம்பத் துக்கருத் தில்லார் பிறப்பென்பர் வையகத்தே.

இ-ள். மா-மகத்தான — தம்பத்தில்- தூணிலே — கொங்கையும்-குயங்களும் — அல்குல்-சகனப்பிரதேசமாகிய — தேரும்-தேர்த்தட்டும் — வயிறும்-குக்ஷியும், இல்லை —, பத்துமாதம்- ஈரைந்து திங்களளவைக்கும் — குறியும் - (காணப்படுகிற) குறிகளையும் — கண்டிலேம்-காண்கில்லேம் — வந்துதோன்றின-உதித்துவிளங்கினாய் — பூமாதுகமலைப்பிராட்டியார் — அம்பத்துக்கு - அம்பகத்துக்கு — விலோசனங்களுக்கு ※ எதிர் - பிரத்தியக்ஷமாய் விளங்கும் — மார்பா - வக்ஷஸ்தலமுடையாய், அரங்கத்து —, வாழ்-உறையும் — பரந்தாமா-பரந்தாமனே — தம் - தமக்குரிய — பத்துக்கருத்து - பக்தியாகிய நினைவு — இல்லார்-அற்றவர் — பிறப்பென்பர்-நரஹரியும் ஜென்மமுடையதென்பர் — வையகத்தே-பூமியிலே — எ-று. (௬௧)

வைகுந்தர் தாமரை போற்பா தர்நாகத்து மாதர்புட
வைகுந்த மேற்கொண் டிருந்தோர் வடிவைந்தின்வாழுமிடம்

வைகுந்தம் பாற்கடன் மாநீ ரயோத்திவண் பூந்துவரை
வைகுந்த மன்பர் மனஞ்சீ ரரங்கம் வடமலையே.

இ-ள். வை- கூரிய—குந்தர் - குந்தாயுதத்தை யுடையவர்—தாமரைபோல்-அம்புயம் அன்ன—பாதர்- சரணுடையவர்—மாதர்-கோவியரது—புடவை - துகிலை—நாகத்து - புன்னைவிருக்ஷத்திலும்—குந்தமேல் - குருந்தமரத்துமேலும்—கொண்டு - கவர்ந்து—இருந்தோர்-ஒளித்திருந்தவர்—வடிவைந்தில்- பஞ்சாகரத்தொடும்—வாழும்.- உறையும்—இடர்-தலங்கள்—வைகுந்தம் - திருமாமணிமண்டபம்—பாற்கடல்-க்ஷீராப்தி—மாநீர்-சக்கரநீர் (சூழ்தரும்) அயோத்தி-திரு அயோத்திமாநகரம்—வண் - யாணர்பொருந்திய—பூந்துவரை-பொலிவுற்ற துவாரகாபுரி—வைகும் - நடக்காநின்ற—தம்-தமது, அடியார்—, மனம்-இதயகமலம்—சீர் - சிறப்புற்ற, அரங்கம்—, வடமலை-திருவேங்கடம்—எ-று. ()

வடமலை தென்மலை கச்சி குறுங்குடி மானிற்பது
வடமலை வேலை யரங்கங் குடந்தை வளருமிடம்
வடமலை கொங்கைத் திருவோ டிருப்புவை குந்தங்கர
வடவலை யன்ப ருளநடை யாட்ட மறையந்தமே.

இ-ள். மால்-திருமால்—நிற்பது- நின்றகோலமாயிருப்பது—வடமலை-சேஷாசலம்—தென்மலை-ரிஷபகிரி—கச்சி - திருக்காஞ்சி—குறுங்குடி—, வளருமிடம்-கிடந்தகோலமாயிருப்பது—வடம்-ஆலிலை—அலை - திரைகள்பொருந்திய—வேலை - பயோததி—அரங்கம்—, குடந்தை—, வடம்-தாழ்வடங்கள், அலை-திவளும் (அன்றிக்கே) வடம்-தரளவடங்களை—மலை-அணியும்—கொங்கை-ஸ்தனங்களையுடைய—திருவோடு-பிராட்டியாருடன்—இருப்பு-தங்கும்கோலமாயிருப்பது—வைகுந்தம்-திருமாநகரம்—நடை-சென்றகோலமாயிருப்பது—கரவடம்-வஞ்சகமுதலியவற்றை—அலை-கைக்கும், அன்பர்- நேசர்களுடைய—உள்ளம் - மனம்—ஆட்டம் - நடிக்கும் கோலமாயிருப்பது—மறைஅந்தம்-வேதத்தின்முடிவில்—எ-று. ()

அந்தக ராசலம் வந்தா லுனைப்பழை டாதிருப்பார்
அந்தச ராசலங் காபுரி யார்க்கரங் காமறையின்
அந்தக ராசவக் கூக்குர லோயுமுன் ஞழ்தடங்கல்
அந்தகராசலத் தேதுஞ்ச நேமி யறுகக்கண்டே.

இ-ள். ராசலங்காபுரியார்க்கு- இராஜரீகம்பொருந்திய இலங்கைவாழரக்கருக்கு—அந்தக-காலனே, அரங்கா—, மறையின்-ஆரணத்தின்—அந்த-அந்தரத்தில் நடிப்பவனே—கராசலம்-துதிக்கையை

புடைய வனைபோன்றவாரணத்தின்—கூக்குரல்-விளிக்கும்ஓசை—
ஒப்புமுன்-ஒழிபுமுன்னமே—ஆழ்-அகாதமான—தடம்-வாவியுள்—
கலந்த-தோய்ந்த—கரா-மகரமானது—ஜலத்தை-நீரிலே—துஞ்ச-
மாய—நேமி-(நினது) திகிரி—அறுக்க-தடிந்திட—கண்டு-பார்த்து
ம்—ஆசு-தீங்கு—அலம்-சஞ்சலம்—(இவைமுதலியவை) வந்தால்-
நேர்ந்தகாலத்து—உன்னை-நின்னை—அழையாது-(ஆபத்பாந்தவா
என) விளிக்காது—இருப்பார்-(அந்தத்துன்பங்களிலே) இருப்ப
வர்—அந்தகர்-குருடர்--(ஞானக்) கண்ணற்றவர்—எ-று. (௩௪)

அறுகு தலைப்பெய் பனிபோன் றதா துரு வாய்ப்பிறந்தல்
அறுகு தலைப்பிள்ளை யாய்க்கா ளையாய்க்கிழ மாகியையள்
அறுகு தலைச்செய்து வீழ்கா யநானென்னு மாரிருளை
அறுகு தலைக்கொள் பணியரங் காநின்க ணாசைதந்தே.

இ-ள். அறுகுதலை- அறுகம்புல்லினிடத்தில்—பெய்-வீழும்—ப
னிபோன்ற-பனிபோலும் சிறிய—தாது-இந்திரியம்—உருவாய்-ரூ
பங்கொண்டு--பிறந்து-ஜென்மித்து—அலறு-அழுகிற—குதலைப்
பிள்ளையாய்-மழலைச்சொற்களையுடையமகவாய்—காளையாய்-யௌ
வனமடைந்து—கிழமாகி-மூப்படைந்து—ஐ-சிலேஷ்மமாகிய—அ
ளறு-சேறு—உகுதலைச்செய்து-சிந்தி—வீழ்-மரிக்கும்—காயம்-ஜ
டலத்தை—நான்என்னும்-நான்என்றுசொல்லும் அகங்காரமாகிய—
ஆர்-நிறைந்த—இருளை-அந்தகாரத்தை—அறு-நீக்கு—கு-தராதலத்
தை—தலை-முடியில்—கொள்-சுமக்கும்—பணி- திருவனந்தாழ்வா
னிடத்து (துயில்கூரும்)—அரங்கா—, நின்கண்-உன்னிடத்தில்—
ஆசை-அன்பு—தந்து-அளித்து—எ-று. (௩௫)

ஆசுக விக்கு நிகரொனக் கில்லையென் றற்பனைப்பூ
ஆசுக விக்குவில் வேள்வடி வாவறி வாலகத்திய
ஆசுக விக்கு வலயமன் னாவென் றரற்றியிரந்தும்
ஆசுக விக்கும் புலவீர் புகழ்மி னரங்கனையே.

இ-ள். ஆசுகவி-வினாவில் கவிபாடுவதில்—எனக்குநிகர் இல்லை
யென்று-என்னைப்போன்றவரில்லையென—அற்பனை-பற்றையைய—
பூ ஆசுகம்-புஷ்பபாணத்தையும்—இக்குவில்-கருப்புவில்லையுமு
டைய—வேள்வடிவா-மன்மதசொரூபனே---அறிவால்-கல்வியில்—
அகத்தியா-குறுமுனியே—சுக-சுகரிஷியே—இக்குவலயமன்னா-இம்
மண்டலேச்சுரனே—என்று அரற்றி- எனப்பிதற்றி—இரந்து-எற்
று—ஆசு-எதங்கள்—கவிக்கும்-மொய்த்திருக்கும்—புலவீர்-நாவல
ர்காள்—அரங்கனையே—, புகழ்மின்-பரவுங்கள்—எ-று. (௩௬)

கனகவி மாலையற் றீனர்க் குரைக்கிலென் கால்பெற்றவா
கனகவி மானற் கருடப்புள் ளூர்தியைக் கான்மலர்கோ
கனகவி மானம் புவிமான் றடவரக் கண்வளருங்
கனகவி மானத் தரங்கனை நாச்சொல்லக் கற்றபின்னே.

இ-ள். கால்-வாயுபகவான்—பெற்ற-ஈன்ற—வாகனம்-ஊர்தியாகிய—கவி-சிறியதிருவடியையும்—மால்- பெருமைபொருந்திய—நல்-அழகுள்ள—கருடப்புள்-பெரியதிருவடியையும்—ஊர்தியை-கடாவுமவனை—கால்மலர்-பாதபத்மங்களை—சேர்கனகம்- வாரியமலருதித்த—இம்மான்-இந்த ஸ்ரீதேவியும் — அம்புவிமான் - (அந்த) பூமிப்பிராட்டியும்—தடவர-தைவர— வருட ※ கண்வளரும்- துயில்கூரும்—கனகவிமானத்து-சொன்னவிமானத்தையுடைய — அரங்கனை—, நா-ஜிகுவையினால்—சொல்ல- ஸ்தோத்தியஞ்செய்ய—கற்றபின்-பயின்றபின்னர்—கனம்- பெருமைபொருந்திய—கவி-கவித்துவங்களை—மானம்-கவுரவம்—அற்று - ஒழிந்து, ஈனர்க்கு-புல்லர்க்கு—உரைக்கிலென்-சாற்றிலேன்—எ-று. (௯௭)

கற்றின மாயவை காளையர் வான்கண்டு மீணினைவ
கற்றின மாயமு நீகன்று காளைய ராகிப்பல்ப
கற்றின மாயர் பரிவுறச் சேரி கலந்தமையுங்
கற்றின மாயவொண் ணாவரங் காசெங் கமலற்குமே.

இ-ள். கற்றினமாயவை-பசுக்குலங்களும்—காளையர் - பிள்ளைகளும்—வான்-விண்ணுலகை—கண்டு-தரிசித்து—மீள்-திரும்பிய—நினைவு-ஞாபகத்தை—அகற்றின - விலக்கிய—மாயமும் - ஆச்சரியமும்—நீ—, கன்று-(அந்தப்பிரமன்கவர்ந்துகொண்டுபோன) கன்றுகளும்—காளையர்-சிறார்களும்—(போல) ஆகி - உருவெடுத்து—பல்பகல்தினம்-வெகுநாள்வரைக்கும்—ஆயர் - பொதுவர்—பரிவு உற-(தங்கள்தங்கள்கன்றுகள் பிள்ளைகள்என்று வேற்றுமையின்றி) அன்புஉற்றிருக்கும்படிக்கு—சேரி- திருவாய்ப்பாடியுள்—கலந்தமையும்-சேர்ந்துஇருந்தமாயமும் — அரங்கா—, செம்கமலற்கும்-செய்யதாமரையில்வந்தவனுக்கும்—கற்று-பயின்று—இன்னம்—, ஆயவொண்ணா-ஆராயக்கூடாது—எ-று. (௯௮)

கமலங் குவளை மடவார் தனங்கண்க ளென்றுரைத்த
கமலங் குவளை முதுகா கியுங்கரை வீர்புனற்கா
கமலங் குவளை விளையா டாங்கன்வின் காற்றுகனல்
கமலங் குவளையுண் டான்றெண்ட ராயுய்ம்மின் காமமற்றே.

இ-ள். மடவார்-ஏழையருடைய—தனம் - குயங்களை—கமலம்-தாமரைமொட்டு—கண்கள்-நாட்டங்களை, குவளை-நீலோத்பலம்—என்றுஉரைத்து-என (உவமானங்கள்கற்பித்து) சொல்லி — அகம்-மனமானது—மலங்கு-கலங்குதலாய்—வளைமுதுகுஆகியும்- கூன்வந்தும்—கரைவீர்-நைவீர்காள்—காமம்அற்று-(அந்த) மோகத்தை ஒழித்துவிட்டு—புனல்காகம்-காரண்டமும்—மலங்கு-நாரையும்—வளை-பணிலங்களும்—விளையாடு—, அரங்கன் - அரங்கநகரான்—விண்-ஆகாயம்—காற்று-வாயு—கனல்-தேயு—கமலம்-அப்பு—கு-பிருதிவி—(ஆகியபஞ்சபூதங்களொடு) அளை - ததியையும்— உண்டான்-அமுதுசெய்தவனுக்கு—தொண்டராய் - தாசர்களாகி—உய்ம்மின்-உஜ்ஜீவியுங்கள்—எ-று. (௬௯)

காமனத் தால்விழ வூதியக் காவைக் கவரரங்கன்
காமனத் தாவென்று நைவார்க் கமுதன்கன் னெஞ்சர்க்கிரங்
காமனத் தானளக் குங்கடற் பார்கலம் போன்றதுமீ
காமனத் தாமரை யோன்கங்கை பாய்மரங் கான்மலரே.

இ-ள். கா - கற்பகத்தருவுக்கு—மன் - இறையாகிய இந்திரன்—நத்தால்-சங்கநாதத்தினால்—விழ-மூர்ச்சையடைய—ஊதி-தொனித்து—அக்காவை-அந்தத்தருவை—கவர்-வவ்விய—அரங்கன்—,காமன் அத்தாஎன்று-மதனசனகாஎன— நைவார்க்கு - மனதுருகுமவர்க்கு—அமுதன்-(நாவினிடத்து) தேவாமிர்தம்போலருசிப்பவன்—கல்நெஞ்சர்க்கு-வன்மனத்தார்க்கு—இரங்கா - கருணையளிக்கிலா—மனத்தான்-(அவர்களைப்பார்க்கிலும்கடிய) சிந்தையுள்ளவன்—(அவன்) அளக்கும்—, கடல்பார்-ஆழிசூழுலகு—கலம்- வங்கத்தையும்—அத்தாமரையோன்-அந்தப்பங்கயன்—மீகாமன் - மாலுமியையும்—கங்கை-சாநவிநதி—பாய்-பாயையும்—கான்மலர்-(அவனுடைய)பாதபங்கேருகம்—மரம்.பாய்மரத்தையும்—போன்றது-ஒத்தது.(௭௰)

மலருந்தி மேல்விழ மெய்நெரித் தான்வைய மேழுந்துஞ்சா
மலருந்தி னானரங் கன்குற ளாய்மண் ணளந்தவந்நாண்
மலருந்தி வாக்கதிர் வண்குடை யாய்முடி மாமணியாய்
மலருந்தி யாய்த்திருத் தாள்விர லாழி மணியொத்ததே.

இ-ள். மலர் - மல்லர்கள்—உந்தி - தாண்டிவந்து—மேல்விழ-தன்மீதுவீழவும்—மெய்- (அவர்கள்) உடலை, நெரித்தான் - குமைத்தவன்—வையம்ஏழும் - சப்தபுவனங்களையும்—துஞ்சாமல்- நாசமுறாது—அருந்தினான் - விழுங்கினவன்—அரங்கன்—,குறளாய்-வாமனனாய்—மண் - உலகினை—அளந்தஅந்நாள் - அளந்துகொண்

டபோது—மலரும் - தோன்றும்—திவாக்கதிர் - தினகரன்—வண்குடையாய் - (முதல்) அழகிய கவிகையாய்—முடி - (உடனே) சிகையில்தரித்த—மா-மகத்தான—மணியாய் - ரத்தினமாய்—மலர்உந்தியாய்-(பிறகு) பங்கஜநாபியாய்—திருத்தாள்—(அநந்தரம்) திருவடியில்—விரல்-விரலில் அணியும்—ஆழி - அறுகாழிமோதிரத்தின்—மணி-மாணிக்கத்தை—ஒத்தது-நிகர்த்தது—எ-று. (௭௧)

மணிவா சற்றூங்க வொருகுடைக் கீழ்வையங் காத்துச்சிந்தா
மணிவா சவனென வாழ்ந்திருப் போர்பின்னை மாதிருக்கு
மணிவா சமார்பரங் காகே சவாவென்று வாழ்த்தித்திரு
மணிவா சகங்கொண் டணிவா ரடியை வணங்கினரே.

இ-ள். வாசல்-தலைவாயலில்—புறங்கடையில் ※ மணி-ஆராய்ச்சிமணி—தூங்க-தொங்கவும்—ஒரு-அதுலமான—குடைக்கீழ்-பூச்சக்கரக்குடைநீழலில்—வையம்-மேதினிமுழுதும்—காத்து-தாங்கி,சிந்தாமணி-(வேண்டிற்றெல்லாமளிக்கும்) சிந்தாமணியையுடைய—வாசவனென - தேவேந்திரன்போல்—வாழ்ந்து - (சகல)வைபவமும் அநுபவித்து—இருப்போர்-வீற்றிருப்பவர்—(யாவரெனில்) பின்னைமாது - திருமங்கை—இருக்கும் - தங்கும்—மணி-சுந்தரமுள்ள—வாசம் - (குல்லை) மணங்கமழும்—மார்பு - அகலமுடைய—அரங்கா—, கேசவா—, என்றுவாழ்த்தி- எனத்துதித்து—திருமண்-திருமண்ணை—இவ்வாசகம் - இந்தத்திருநாமங்களை—கொண்டு-பாராயணஞ்செய்து—அணிவார் - தரிப்பவரது—அடியை - பாதங்களை, வணங்கினரே-தாழ்ந்தவரே—எ-று. (௭௨)

வணங்கரி யானரங் கன்னடி யார்தொழ வாளரவு
வணங்கரி யாடற் பரிதேர் நடத்தெந்தை வானவர்க்கும்
வணங்கரி யானன்றிக் காப்பா ரில்லாமைவிண் மண்ணறியும்
வணங்கரி யானவர் வாணன்கண் டாகனன் மார்க்கண்டனே.

இ-ள். வண்ணம் - மேனி—கரியான்-அஞ்சனமன்னவன்—அரங்கன்—, அடியார்-தொண்டர்கள்—தொழ-சேவிக்க—வாள்-ஒளிநிலாவிய—அரவு-சர்ப்பம்—உவணம் - கருடன்—கரி-யானை—ஆடல் - நடனமாடுகிற—பரி-குதிரை—தேர்-ரதம்—(இவைமுதலிய வாகனங்களை) நடத்து-பவனிநடாத்தும்—எந்தை-எம்தந்தை—வானவர்க்கும்-சுரர்களுக்கும்—வணங்குஅரியான் - வணங்குதற்குஅசக்கியன்—அன்றி-(அவனை) அல்லாது—காப்பார்-இரக்ஷிப்பவர்—இல்லாமை- இல்லாதிருக்கும் தன்மையை—விண்-தேவரும்—மண் - மனிதரும்—அறியும்வண்ணம் - ஒரும்படிக்கு— கரியானவர்—சாக்ஷியானவர்—வாணன், கண்டாகனன், மார்க்கண்டன்—எ-று. (௭௩)

கண்டலங் காரள கங்கெண்டை மேகங் கவிரிதல்சொல்
கண்டலங் கார முலையிள நீரொன்று கன்னியர்சீர்
கண்டலங் கார மருளேன் புனற்கயல் கொக்கென் றஞ்சக்
கண்டலங் கார மலரரங் கேசர்க்குக் காதலனே.

இ-ள். புன-நீரிலுற்ற—கயல்-கெண்டைமீன்கள்—கொக்கு என்று-குரண்டமென்று—அஞ்ச-பயப்பட—கண்டல்-கைதை—அங்கு-(அந்தப்புனலின்பக்கங்களில்)—ஆர-மிகுதியும்—மலர்-விகஸிக்கும்—அரங்கேசர்க்கு-அரங்கநாதருக்கு—காதலன்-நேசனுயினேன்—(ஆகையால்) கன்னியர்-மங்கையரது—கண்தலம்-விழிகளை—கெண்டை-சேல்—கார்-இருள்பூத்த—கரிய ※ அளகம்-குழலை—மேகம்-மங்குல்—இதல்-அதரத்தை—கவிர்-கிஞ்சுகம்—சொல்-குதலைமொழிகளை—கண்டு-கன்னல்—அலங்கு-திவளாநின்ற—ஆரம்-மாலைகளைச்சுமந்த—முலை-கொங்கைகளை—இளநீர்—, என்று-என (உவமானசங்கிரக விதிப்படியே) கூறி—சீர-(அவர்களுடைய) சிறப்புற்ற—அலங்காரம்-சிங்காரத்தை—ரூபலாவண்ணியத்தை ※ கண்டு-பார்த்து—மருளேன்-மதிமயங்கேன்—எ-று. (௭௪)

காதலை வாரிமண் வெண்கோட் டில்வைத் துண்டு காட்டியரங்
காதலை வாகழற் குள்ளாக் கினுய்கரப் பெஃகெனவே
காதலை வார்குழை வைதே கியைநின் கருத்துருக்குங்
காதலை வானரர்த் தேடவிட் டாயிது கைதவமே.

இ-ள். அரங்கா—தலைவா-காவலனே—காது-மோதுகின்ற—அலைவாரி-தரங்கக்கடலுடுத்த—மண்-பார்மடந்தையை—வெண்கோட்டில்-(கோலமாய்) வெள்ளியகொம்பில்—வைத்து-இருத்தி—உண்டு-அருந்தி—காட்டி-உமிழ்ந்து—கழற்குஉள்-(திரிவிக்கிரமமாய்) ஓரடிக்குள்—ஆக்கினுய்-ஒடுங்கப்பணித்தாய்—காது-கன்னத்தில்—அலை-மோதும்—வார்-நெடிய—குழை-குண்டலங்கள்தரித்த—வைதேகியை-சீதாபிராட்டியை—நின்-உனது—கருத்துஉருக்கும்-நெஞ்சைவாட்டும்—காதலை-ஆசைக்கனியை—பிராண நாயகியை ※ கரப்பு-(கண்டகன்) ஒளித்துவைத்தஇடம்—எங்குஎன-யாங்கனமென்று—வானரர்-கவிகள்—தேட-கண்டுபிடிக்க—விட்டாய்-அநுப்பினை—இதுகைதவமே-இதுஎன்னமாயமோ—எ-று.

தவரா கவக்கணை யொன்றாற் கடற்றெய்வந் தானென்றிருந்
தவரா கந்திர்த்துத் தொழக்கண்ட நீதர்ப்பை மேற்கிடந்து
தவரா கப்பாவித் தென்னே தொழுதாய்தண் ணரங்கத்துமா
தவரா கவாகண் ணனேயென் னேனுவ தாரத்தனே.

இ-ள். தண்-சீதளமான — அரங்கத்து - திருவரங்கநகருடைய — மாதவ - பின்னைமணாளனே — ராகவா —, கண்ணனே - திருவீதிருவவதாரனே ※ என்றென்று - அலகுஇடக்கூடாத — அவதாரத்தலேமேல்-சூழல்களுடையாய் — தவர்-கோதண்டத்திலேபூட்டிய — ஆகவக்கணைபடுகளத்துக்குரியவாளி — ஒன்றால்- ஒன்றிலேயே — கடல் தெய்வம்-மகாதேவன் — வருணன் ※ தான்என்றுஇருந்த —, ஆகம்-அகங்காரத்தை — நீர்த்து-ஒழித்து — தொழ-(உன்னை)வணங்க — கண்ட-பணித்த — நீ —, தர்ப்பைமேல் —, இடந்து-சயனித்து — தவர்ஆக- யோகியென்ன — பாவித்து- எண்ணிக்கொண்டு — என்றோ - யாதுகாரணத்தினாலோ — தொழுதாய்-(அவனைமுன்பு) பணிந்தாய் — எ-று. ()

தாரா கண்மண் ணளந்தவந் நாளன்பர் காத்துந்துழாய்த்
தாரா கணம்புயம் போலரங் காதல மேழுக்குமா
தாரா கணமங்கை யாயும்பர் தூவிய தண்மலர்வீழ்
தாரா கணமுநில் லாகாற் றிற்சூழ்வளந் தானொக்குமே.

இ-ள். அன்பர்- நேசர்கள் — சாத்தும் - சூடும் — துழாய்த்தாரா-வனமாலிகையாய் — கண்-விலோசனங்கள் — அம்புயம்போல்- பங்கயம்உறழும் — அரங்கா —, தலமேழுக்கும்-சப்தலோகங்களுக்கும், ஆதாரா-ஆதாரமாயிருப்பவனே — கணமங்கையாய் - திருக்கண்ணமங்கையென்னும்திருப்பதியுற்றவனே — மண்அளந்த அந்நாள் நீ) உலகளந்தபோது — தாரா-விண்மீனினது — கணம்-தொகை — (எங்ஙனம்விளங்கிற்றெனில்) உம்பர்-வானவர் — தூவிய - சொரிந்த — தண்-சீதமுள்ள — மலர்-போதுகள் — வீழ்தாரா- (இம்பரும்) விழாது — கணமும்-ஒருக்ஷணமேனும் — நில்லா-(உம்பரும்) நிலையுற் றிராது — காற்றில்-ஊடையில் — சூழ் - சுழலும் — வளம் - மாட்சிமையை — ஒக்கும்-நிகர்த்தது — எ-று. தான்-அசை. (௭௭)

தானந்தி யாகந் தவங்கல்வி தீர்த்தந் தழலிலவி
தானந்தி யாகந் தருமிழி பாயின தண்ணரங்கத்
தானந்தி யாகப் பகன்மறைத் தான்பெயர் தந்திடும்வே
தானந்தி யாகண் டலனறி யாப்பரந் தாமத்தையே.

இ-ள். தானம்-தானம் செய்தலும் — தியாகம் - தியாகம் அளித்தலும் — தவம்-விரதம்பூணுதலும் — கல்வி-கலைகள்பயில்தலும் — தீர்த்தம்-தூயநீராடப்போதலும் — தழலில்-அக்கினியில் — அவி - அவிர்பாகம் — நந்து-சொரியப் பட்ட — யாகம் - மகங்களும் — இழிபாயின-சிறுபதவிகளை — தரும்-அளிக்கும் — தண் - ஈரமுள்ள — அரங்கத்தான் —, அந்திஆக-மாலைப்போதென்ன — பகல்-பானுவை — மறைத்தான் - (ஆழியால்) மூடினவன்) — (அவனுடைய) பெயர்-சகஸ்திர

நாமங்களுள் ஒன்றே—வேதா-வாணிகேள்வனும்—நந்தி- நாரிபாக னும்—ஆகண்டலன்-சசிமணாளனும்— அறியா-உணரக்கூடாத—ப ரந்தாமத்தை—, தந்திடும்-அளிக்குமாம்—எ-று. தான்-அசை. (எஅ)

தாமரை மாத்திரை மூப்பற் றவானவர் தண்ணறுஞ்செந்
தாமரை மாத்திரை வந்தா டலைவரைத் தண்ணரங்க
தாமரை மாத்திரை போல்வளைந்தேற்றுத் தருப்பொருட்டால்
தாமரை மாத்திரைச் சங்கி னோசையிற் சாய்ந்தனரோ.

இ-ள். தா-தத்தும்—மரை-மண்டுகத்துக்குள்ள — மா- மிகுந்த— திரை-திரையும் — மூப்பு-விருத்தமும் — அற்ற - ஒழிந்த—வானவர்- கடவுளர்—தண் நறும் செந்தாமரை - குளிர்ச்சியும் மணமுமுள்ள செப்பமுண்டகத்திருக்கும்—மா-இலாவண்ணியமுள்ள—திரைவந் தாள்-க்ஷீராப்திதனையை—தலைவரை-நாயகரை—தண் - சீதளமான, அரங்கம்-திருவரங்கமென்னும்— தாமரை-திவ்வியக்ஷேத்திரத் துற் றவரை—திரைமாபோல்-திரைச்சிலையென்ன—வளைந்து - சூழ்ந்து கொண்டு—ஏற்று-எதிர்த்து — தருப்பொருட்டால்- கற்பகவிருக்ஷத் துக்காக — தாம்-தாங்கள்— அரைமாத்திரைக்கே-அரைக்ஷணத்திலே, சங்கின்ஓசையில் - பாஞ்சசன்னியத்தின்தொனியினால்—சாய்ந்தன ர்-மூர்ச்சையடைந்தார்கள்—எ-று. (தாமரை - தாவுகிற கானக்குதி ரைபோன்ற என்றும், தா-கெடுதலும், மரை-மரணமும், என்றும் பொருள்கூறு வாருமுளர்.) (எகூ)

சாகைக்குந் தத்துத் துகிறாக் கிமாதர் தமைநகைத்தாய்
சாகைக்குந் தத்துவங் கட்குமெட் டாய்தண் புனல்ரங்கே
சாகைக்குந் தத்துப் புடையா ழியேந்த றமர்கள்வெய்யோர்
சாகைக்குந் தத்து தவிர்கைக்கும் போலுமுன் சங்கற்பமே.

இ-ள். சாகை-கொம்பர் (தழைத்த)—குந்தத்து - குருந்த மரத்தி லே —துகில்-கலைகளை—தூக்கி-எடுத்துக் கொண்டுபோயிருந்து— மாதர்தமை-கோவியரை—நகைத்தாய் - (உன்னைத்திக்காடைபுனைந் தேற்கும் கோலத்தைக் கண்ணுற்று) முறுவலித்தவனே—சாகைக் கும்-மறைக்கும், தத்துவங்கட்கும்—, எட்டாய்-அகோசரமா யிரு ப்பவனே —தண்-தண்ணிய —புனல்-(காவேரி) ஆறு (பாயும்)—அர ங்கேசா—, கை-கையில் —குந்த-இருக்க — துப்புடை-அடலார்ந்த, (அன்றிக்கே) குந்தத்து - குந்தாயுதத்தின்—புடை- மருங்கில்—ஆ ழி-சுதரிசனாழ்வானை—எந்தல் - தரித்திருப்பது—வெய்யோர் - தீ யோர்—சாகைக்கும்- ஒழிவதற்கும்—தமர்கள் - அடியார்கள்—தத் து-விபத்துகளை — தவிர்கைக்கும்-நீங்கவும்—போலும் - ஒக்கும்— உன்சங்கற்பம்-நினது எண்ணம்—எ-று. (அய)

சங்கத் தமரர் குழாத்தொடு மூழ்வினை தான்விலங்கச்
சங்கத் தமரன்ப ராயிருப் பீர்கட லுனவர்தே
சங்கத் தமரம் படவெய்த சார்ங்கத் தனுவரங்கன்
சங்கத் தமரன் சரணே சரணென்று தாழ்ந்திருமே.

இ-ள். கடல்-சப்தசாகரங்களும்—தானவர் - அசுரர்களுடைய—தேசம்-ஊர்முழுமையும்—கத்த-இரைச்சலிடவும்—மரம் - சப்தமராமரங்கள்—பட-நந்தவும்—எய்த-வாளிதொட்ட—சார்ங்கம்—சார்ங்கமென்னும்—தனு - கோதண்டத்தையுடைய — அரங்கன்—, சங்கம்-பாஞ்சசன்னியத்தின்—தமரன்-முழக்கத்தையுடையவன்—(அன்றிக்கே)சங்கம்-நாவலர்களை—தமரன்-தாசராகவுடையவன்—(அவனது) சரணே-திருவடிகளே—சரணென்று - தஞ்சமென—தாழ்ந்திரும்-காமுற்றிருங்கள்—சங்கத்து- (பரமபதத்தைப்பிரியாது) கூடியிருத்தலையுடைய—அமரர்குழாத்தொடும்-நித்தியசூரிஜனதமுகத்துடனே—ஊழ்வினை-பூர்வகன்மம்—விலங்க- அகல—சங்கத்து-(அவர்கள்) அவையில்—அமர்- பொருந்தும் — அன்பராய்—நேசராய்—இருப்பீர்—எ-று. தான்-அசை. (அக)

இருந்தே னுகமுட வன்வரை நோக்கி யிருப்பதுபோல்
இருந்தே னுகந்துனை வைகுந்த நோக்கி யெதிர்பொருங்கேள்
இருந்தே னுகனும் படவதைத் தாய்வெண்ணெ யாமத்தொளித்து
இருந்தே னுகரரங் காகா னுநாளினி யென்றருளே.

இ-ள். எதிர்பொரும்-மலைந்துயுத்தம்புரியும்—கேளிரும் - தமர்களும்—தேனுகனும்-தேனுகாசுரனும்—பட-விய— வதைத்தாய்-சங்கரித்தவனே—யாமத்து-நடுச்சாமத்திலே—வெண்ணெய் - நவநீதத்தை—ஒளித்திருந்து - (ஆயர்மனையில்) பதுங்கிக்கொண்டிருந்து—நுகர் - உண்ணும்—அரங்கா—, இரும்-பெருமையுற்ற—தேன்—,உக-சிந்த—முடவன்—,வரை - பர்வதத்தை—நோக்கி-பார்த்துக்கொண்டே—இருப்பதுபோல்—,உனை உகந்து - நின்னை வியந்து—வைகுந்தம்நோக்கி - பரமபதத்தைப்பார்த்துக்கொண்டே—இருந்தேன்-(இதுவரைக்கும்) இருந்தனன் — காணும்நாள் இனியென்று-(உன்னை) தரிசிக்குங்காலம்இனி (குறுகிற்று) என—அருள்-(சேவைசாதித்து) அருள்—எ-று. (அஉ)

அரும்பா கவதரிக் கும்பெய ராய்புள் ளரசினுக்கோர்
அரும்பா கவதரந் துப்பனை யாயரங்காவெனவுண்
அரும்பா கவதர் பததீர்த் தங்கொள்ளா தடிகள்கொப்புள்
அரும்பா கவதர் தொலைப்பார் கல்லார்கங்கை யாடுதற்கே.

இ-ள். அரும்பாகு-துதிப்பவர்நாவில்) தண்ணியஇரதம்—அவ் தரிக்கும்-சுரக்கும்—பெயராய்-நாமங்களையுடையவனே—புள்அரனுக்கு-ககராஜனானபெரியதிருவடிக்கு—ஓரரும்பாக-உணர்தற்கரியவலவா—ஆதரம்-இதழ்,துப்புஅனையவாய்-துகிர்அன்னவனே, அரங்கா—எனஉணரும்-என்று (அவனை) தியானிக்கும்—பாகவதர்-பரமபாகவதர்களுடைய—பததீர்த்தங்கொள்ளாது-ஸ்ரீபாததீர்த்தம்ஏற்காது—அடிகள்-உள்ளங்கால்—கொப்புள்அரும்புஆக-கொப்புளிக்க—அதர்தேர்லைப்பார்-தூரவழிகள்(யாத்திரைசெய்து) முடிப்பார்—கல்லார்-கயவர்—கங்கைஆடுதற்கு-கங்கா-ஸ்நானஞ்செய்யும்பொருட்டு—எ-று. (௮௫)

ஆடுமுன் னீர்முதற் றீர்த்தத்தி னாலரு மாதவத்தால்
ஆடுமுன் னீர்மறை வேள்வியி னாலண்ட ராயுடன்மாறும்
ஆடுமுன் னீரது மாயையி னாலென் னரங்கனைக்கொண்டும்
ஆடுமுன் னீர்செய்த பாவமும் போய்முத்த ராம்வண்ணமே.

இ-ள். ஆடும்-முழுகும்—முந்நீர்முதல்-சமுத்திரமுதலாகிய—தீர்த்தத்தினால்-பரிசுத்தஜலங்களாலும்—அரும்-அரிய—மாதவத்தால்-மகாதவங்களாலும்—ஆடு-அசத்தை—முன்—,ஈர்-வெட்டும், மறை வேதவிதிபால்செய்யும்—வேள்வியினால்-மகங்களினாலும்—அண்டர்ஆய்-(நரஜன்மம்போய்)வானவர்ஆக—உடல்-யாக்கையானது—மாறும்-வேற்றுமையுறும்—அது-அப்படிப்பேதப்படுவது—மாயையினால்என்று-(விஷ்ணு) மாயையாலென—உன்னீர்-நினைக்கிலீர்—(அங்ஙனம்வினையுழலாது) முன்-ஜென்மாந்தரத்திலே—நீர்-நீங்கள்—செய்த-இயற்றிய—பாவமும்போய்-தீவினைகளும்அற்று—முத்தர்-முக்திக்குரியவர்—ஆம்வண்ணம்-ஆகும்படிக்கு—அரங்கனை—,கொண்டாடும்-பரவுமின்—எ-று. (௮௬)

வண்ணங் கலிவஞ்சி வெண்பா வகவல் வகைதொடுத்தோர்
வண்ணங் கலிகெட வேண்டுமென் றேமக்கண் மாட்டுரையேன்
வண்ணங் கலிகடல் போல்வா னரங்கன் வகுளச்செல்வன்
வண்ணங் கலியன் புகழ்த்தா ளெனக்கென்று மாநிதியே.

இ-ள். வண்ணம் கலிவஞ்சிவெண்பா அகவல்—, வகை-(இவைமுதலியபாவினதும் பாவினங்களினதும்) கூறுபாட்டினை—தொடுத்து-யாப்புறச்செய்து—ஓர்வண்ணம்-ஒருவிதமாக—கலிகெட-நல்குரவுநீங்க—வேண்டும்என்று—,மக்கண்மாட்டுரையேன்-மானிடம்பாடிலேன்—வண்ணம்-திருமேனி—கலிகடல்போல்வான்-குரைஆழியன்னவன்—அரங்கன்—, (அவனது) வகுளச்செல்வன்-மகிழலங்கற்சடகோபன்—வண்-வளமையுடைய, நம்—,

கலியன் - பரகாலன் (முதலியபன்னிருவர்)—புகழ்-பரவும்—தாள்-திருவடிகளே—எனக்குஎன்றும்—, மாநிதி-இரும்தனமாம். (அரு)

மானு கவரு நிருதன்புன் மாயையின் மங்கையென்னு
மானு கவரு மணியைமுன் னீங்கினன் மாயனென்பார்
மானு கவரும் பலர்சோ லேசூழு மதிலரங்கா
மானு கவரு மமுதே யதுவுநின் மாயமன்றே.

இ-ள். மாயன் - ஆச்சரியபூதனான இராமன்—மான்ஆக - (பொன்) உழையென—வரும்—, நிருதன் - (மாரீசனென்னும்) அரக்கனது—புன்மாயையின்-புல்லிய மாயைக்குட்பட்டு—மங்கைஎன்னும்-பெண் (அரசு) என்றிசைக்கப்படும்—மா-மகத்தான—அரும்-கிடைத்தற்கரிய — நாகமணியை - நாகரத்தினம் (போலும் சீதாபிராட்டியை)—முன்-பண்டு—நீங்கினன்-பிரிந்தான்—என்பார்—, மால் - உன்னதமான—நாகம் - புன்னேயினது— அரும்பு - முகைகள்—அலர்-கட்டவிழ்க்கும், சோலேசூழும்-தண்டலேயுடுத்த, மதில் அரங்கா - பிரகாரங்கள் பொருந்திய அரங்கமாநகருளானே—நா-(அடியார்களது) ஜிகுவை—மால் - ஆசையுடன்—கவரும் - இரசிக்கப்பட்ட—அமுதே - அமிழ்தன்னவனே—அதுவும் - அப்படிநீமயங்கியதும் ※ இந்தமூடர்கள் அப்படிச்சொல்வதும் ※ நின்மாயம்அன்றே - உனதுமாயையல்லவோ—எ-று. (அசு)

மாயா தவர்தலே வாவரங் காவட மாமதுரை
மாயா தவரண்டர் வந்தடைந் தான்மமு வாளிபிர
மாயா தவர்செய்வர் முந்நூல் செந்நூல்சொண்ட வண்ணமொப்ப
மாயா தவரத் தனேக்குடல் கோத்தநுன் வாணகமே.

இ-ள். மா - பெருமையுற்ற — யாதவர்தலேவா - அண்டர்குலத்துக்கதிபதியே—அரங்கா—, மாவடமதுரை மாயா - பெரிதான வடமதுரையிற்பிறந்த ஆச்சரியகுணங்களுள்ளவனே, தவர் - இருடிகள்—அண்டர்-உம்பர் (முதலியவர்)—வந்து அடைந்தால்—(ஒருவனுக்குஅஞ்சி)அடைக்கலம்புகுந்தால், மழுவாளி- அழலேந்தியும், பிரமா-அயனும், (ஆகிய) அவர் - அவ்விருவரும்-யாதுசெய்வர் (அவனே) என்னபண்ணுவார்கள்—(ஆனல்)முந்நூல்-(நினதுமார்பகம் விளங்கிய) முப்புரிநூல்—செம்நூல்கொண்டவண்ணம்-சிவந்தநூலுடைய நிறத்தை—சிவப்புநிறத்தை ※ ஒப்ப-பொருவ—மாயாத-அச்சுதமான—அழிவில்லாத※வரத்தனே-வரங்களேயுடைய இரணிய

னுடைய, குடல்-குடரை—உன்-தினது—வாள்-ஒளிநிலாவிய, நகம்-உகிர், கோத்தது-(பிடுங்கி) அணிந்தது—எ-று. (அஎ)

(துன்பம் வந்தகாலத்தில்தேவரும் இருடியரும் சிவனைப்போயடுக்க அவன் தன்னாலொன்றுமாகாமல் பிரமனையடுக்க அவனும் அங்ஙனமே விஷ்ணுவைச்சரணெய்த அப்பொழுது அவர் இவர்களுக்கு அபயஸ்தங்கொடுப்பது வழக்கம் அதற்கு இரணியன் விஷயமும் ஓர் உதாரமாகையால் அதையெடுத்துச்சொன்னார்.)

நகமுண் டகந்தரித் தாற்கருண் மாயர்க்கு ஞாலமுந்நீர்
நகமுண் டகமகிழ்ந் தார்க்கடி யேமென்மி னற்கதிவா
நகமுண் டகம்பர னென்னா தரங்கனை நாடிலய
நகமுண் டகமலர் தான்குவி யாது நடுக்குளத்தே.

இ-ள். நகம்-உகிரால்—உண்ட-கிள்ளுண்ட—கம்-சிரத்தை—தரித்தார்க்கு-எந்தியசிவனுக்கு—அருள்-கருணைசெய்யும், மாயர்க்கு-ஆச்சரியபூதனுக்கு—ஞாலம்-புவனங்களையும்—முந்நீர்-சமுத்திரங்களையும்—நகம்-பருப்பதங்களையும்—உண்டு-விழுங்கி, அகம்மகிழ்ந்தார்க்கு-மனம்களித்தவர்க்கு, அடியேம்-தாசர்களாயினோம்—என்மின்-என்றுசொல்லுங்கள்—நற்கதி-சிரேஷ்டமுள்ள பதவியாகிய—வானகம்-திருநாடு—உண்டு-சித்திக்கும்—அகம்பரனென்னாது-யான்தான்பரமானவன் என்னாமல்—அரங்கனை—, நாடில்-நணுகினால்—அயன்-பிரமனது—நகு-விளங்குகிற—அம்-சுந்தரமுள்ள—முண்டகமலர்-தாமரைக்கை—உம்நடுக்குளத்தே-நுங்களதுநெற்றியின் மத்தியிலே—குவியாது-முகுளியாது—எ-று.

(முண்டகமலர் என்பது உவமைஆகுபெயர்—அதுநெற்றியில் குவியாது என்பது பிரமன் தன்கையைக்குவித்துங்கள் நெற்றிமையத்தில் உங்களுக்கு மறுபடியும்பிறக்க விதிவிதிக்கான் என்பதுகருத்து.) (அஅ)

குளப்படி நெய்யடி சிற்கொத்த தோகொள்ளப் பற்றியதோ
குளப்படி யிற்றிங்கள் சேரரங் காகோ லமாயவன்றுன்
குளப்படி காட்டும் பிறைமறுப் போலொரு கோட்டிருந்து
குளப்படி யின்னகத் துட்பரல் போன்ற குவலயமே.

இ-ள். குளம்-வாவியின்—படியின்-சோபானங்களால்—திங்கள்சேர்-சந்திரன்போலும் (புட்கரணியையுடைய)—அரங்கா-திருவரங்கமுடையாய்—கோலம்ஆய அன்று-வராகஅவதாரம்

கொண்டபோது—உன்-நினது, குளம்படி-நெற்றியைப்போல்—காட்டும்-தோன்றும்—பிறை - குழவித்திங்களின் — மறுப்போல்—களங்கமென்ன—ஒரு-(உனது) அதுலமான—கோட்டு-மருப்பில்; இருந்து—, குளப்பு-குளம்புடைய—அடியின் அகத்துள்- உள்ளங்காலில்—பரல்போன்ற-பருக்கைக்சல்நிகர்த்த—குவலயம் - உலகமானது (உண்டவந்நாளில்)—படி-ஒருபடியளவுகொண்ட, குளம்-சர்க்கரையும்—நெய்-ஆகாரமும் (கலந்த) அடிசிற்கு—பொங்கலுக்கு—ஒத்ததோ - நிகர்த்ததோ (அல்லது) —கொள்ளப்பற்றியதோ-வயிறுநிறையப் போதுமாயிற்றோ—எ-று. (௮௯)

குவலயஞ் சூழ்கடல் காயா மரகதங் கொண்டனெய்தல்
குவலயங் கண்டன்பர் நைவரென் றாற்கொற்ற வாணற்குவா
குவலய நேமிதொட் டாயரங் காகொடும் பல்பிறப்பா
குவலயங் சற்றுனைக் காணிலென் னுங்சொல் குறிப்பவர்க்கே

இ-ள். கொற்றம் - வென்றியுடைய, வாணற்கு—, வாகு-புஜங்கள்—அலைய-ஒளிழ—நேமிதொட்டாய் - சக்கரப்பிரயோகஞ் செய்தவனே, அரங்கா—, குவலயம்-நேமிவட்டத்தை—பூமியை* சூழ் - வளைந்திருக்கும்—கடல்-நீராழி—காயா-பூவை—மரகதம்- நீலமணி—கொண்டல் - காளமேகம்—நெய்தல்- ஆம்பல்—குவலயம்-நீலோற்பலம்—கண்டு-கண்ணுற்று—அன்பர் - நின் அடியார்கள்—நைவர் என்றால் - (நின்படிவத்தை அன்னவை நினைப்பூட்டலின்) சிந்தை உருகுவாரெனில்—கொடும்-கொடிய—பல்-ஈறில்லாத—பிறப்பாகு-ஜென்மமாகிய—வலை-கண்ணியினின்றும்—அற்று- நீங்கி, அங்கு - அந்தத் திருமாமணி மண்டபத்திலே—உனை-தேவரீரை—காணில்-தரிசித்தால், அவர்க்கு—, குறிப்புஎன் ஆம்கொல்-நெஞ்சு—என்ன ஆகுமோ—எ-று. (௯௰)

குறியானைச்செங்க ணெடியானைவானவர் கோவைச்சங்கக்
குறியானைவித்த திருவரங் கேசனைக் கூவிநின்று
குறியானைகாத்தவனைப்பாடினேன்கொடிகூப்பிடினுங்[ன்றே
குறியானையப்புவர்போற்கொடியேன்சொலுங் கொள்வனே

இ-ள். குறியானை-வாமனனை—செம்கண்-செந்தாமரைபோலும் திருநயனங்களையுடைய—நெடியானை - திரிவிக்கிரமனை—வானவர் கோவை - தேவேந்திரனை—சங்கக்குறியால்-பாஞ்ச சன்னியத்தின் முழக்கத்தினால்—நைவித்த-வாட்டிய—திரு அரங்கேசனை—, கூவி நின்று - விளித்து—குறி-சிந்திக்கும்—யானை-கஜேந்திராழ்வானை—

காத்தவனை-அளித்தவனை—கொடி-காக்கை—கூப்பிடினும்- கத்தினு
லும்—குறியா -(அதையும்நல்ல) சகுனமென—நயப்பவர்போல்-
விரும்பிக்கொள்பவர்போல—கொடியேன்சொல்லும் - தீயவென
து சொற்களையும்--கொள்வனென்று-அங்கீகரிப்பானென—பாடி
னேன்—எ-று.
(௯௧)

வனத்திற் சிலம்பி விடுநூ லுட்பட்டு மசகமெய்த்த
வனத்திற்சிலம்பின போற்பிணி வாய்ப்பட்டென்வாய்புலம்பின்
வனத்திற் சிலம்பின் குரலன்னம் வாழு மரங்கனிப்பு
வனத்திற்சிலம்பினின்றான்கேட்குமோ வும்பர்வாழ்த்தைவிட்டே.

இ-ள். மசகம்-கொசுகானது—வனத்தில் - அடவியில்—சிலம்பி
விடும் - ஊரணநாபியிழைக்கும்—நூலுள்பட்டு-தந்தில்சிக்கி—மெ
ய்த்தவனத்தில்-உடல்தவிப்பினால்—சிலம்பினபோல்-அரற்றினவை
போல—பிணிவாய்ப்பட்டு-நோய்க்கண்அகப்பட்டு— என்வாய்—,
புலம்பின்-அழுங்கினால்—வனத்தில்-புனலில்—சிலம்பின் - சில்லரி
யின்—நூபுரத்தின் ※ குரல்-ஒலியினையுடைய—அன்னம் - ஓதிமப்
பறவைகள்—வாழும்-அமரும்— அரங்கன்-திருவரங்கநகரான் —இப்
புவனத்தில்-இந்தமேதினியில்-சிலம்பில்நின்றான்- திருமலையில்நிற்
பவன்—உம்பர்-வானவர்—வாழ்த்தைவிட்டு-மங்களவாழ்த்தைவிடு
த்து—கேட்குமோ-செவியுறுவனோ—எ-று. (௯௨)

விடத்தேளைமன்னும் வனப்பாழ்ங கிணற்றுள்வெம் பாம்பு
பற்றும், விடத்தேளைவாய்வண்டு தேன்வேட் டல்போல்விசித்து
க்கொடுபோய், விடத்தேளையில்வெங்கட் கூற்றையெண்ணுதெ
ண்ணும் வேட்கையெல்லாம், விடத்தேளையூரரங கன்றிருத்தாளி
ல்விழுநெஞ்சமே.

இ-ள். நெஞ்சமே-மனமே—விடத்தேளை-விடத்தேரின் தூற்றி
னை—மன்னும்-(படர்ந்து) இருக்கப்பெற்ற—வனம்- கானகத்திலு
ள்ள—பாழ்ங்கிணற்றுள்-பாழடைந்தகூபத்திலே, வெம்-கொடிய,
பாம்பு-நாகம்—பற்றும்-பிடித்திருக்கும்—விடம் - நஞ்சேறிய—
தேளை-பிலவங்கத்தினுடைய—வாய்வண்டு- வாயில்அகப்பட்டசுரு
ம்பு—தேன்-மகரந்தத்தை—வேட்டல்போல்- அவாவுதலென்ன—
விசித்துக்கொடுபோய்விட-இழுத்துக்கொண்டேக—தேர் - எண்
ணும்—அயில்-வேலினையும்—வெம்கண்-கொடூரமுள்ளதிருக்குகளை
யுமுடைய—கூற்றை-அந்தகனை—எண்ணாது-மதியாமல்—எண்ணு
ம்-கருதும்—வேட்கையெல்லாம்-பாசங்கள்யாவும்—விடு-நீக்கு—

அத்தேனா-அந்தஇரதத்தை—ஊர்- கடாவும்—அரங்கன்—, திருத் தாளில்-திருவடியில்—விழு-சேர்—எ-று. (கூங)

விழுங்கூன் றசைச்சுவர் நீர்மலங் கோழைவெம் பித்தொடுங்க
விழுங்கூ னரம்புறி யென்பே ணிதோற்சட்டை வீழ்ந்துநொந்த
விழுங்கூந் தலாரழப் பாடையிற் போய்ச்சுடும் வெய்யசெந்தீ
விழுங்கூ னநோய்க்குடில் வேண்டே னரங்க விமானத்தனே.

இ-ள். விழுங்கு-(நாய்நரிமுதலியவை) கவ்வும் — ஊன்தசை-ஊனொடும்புலாலொடும்கூடிய—சுவர்—, நீர்—, மலம்—, கோழை-சிலேஷ்மம்—வெம்-வெவ்விய—பித்தொடும்-பித்தத்துடன்கூடிய, கவிழும்- தலைகீழாகத்தக்க, கூன்—, நரம்புஉறி-தாதுகளாலாயதூக்கு—என்புஎணி-அஸ்திகளாலமைத்த கடவை—தோல்சட்டை-சருமத்தாலாகிய அங்கி—வீழ்ந்து-தரையில்புரண்டு—நொந்து-மனனைந்து, அவிழும்கூந்தலார்-விரித்த அளகபாரத்தையுடையமனைவியர்—அழ-கலுழ, பாடையில்—, போய்- (மயானஞ்) சென்று—சுடும்-தகனஞ்செய்யும்—வெய்ய-சுவாலைகள் வீசும்—செம்-சிவந்த நிறமுடைய—தீ-அக்கினியில்—விழும் - சேரும்—கூன- கோட்டமுடைய—நோய்-பிணிகள் (குடிகொள்ளும்)—குடில் - சிதிலகிரகம்—(இதனை) வேண்டேன்-விரும்பகில்லேன்—அரங்க விமானத்தனே-ரங்கவிமானத்தில் கண்படுப்பவனே—எ-று. (கூன் என்பது-அடியற்ற ஓர்விதப்பாண்டத்தின்பெயர்.) (கூச)

மானத்து வண்ட லுழவோ ரெழுத்தின் வடிவுற்றசீர்
பானத்து வண்ட வினையா ளராயினு மால்வளர்வி
மானத்து வண்டல மாமரங் கம்வழி யாவரினு
மானத்து வண்டமர் தாரண்ட ராம்பதம் வாய்க்குமங்கே.

இ-ள். மால்-உன்னதமான—நத்து-வளையானது—வண்டல்-அள்ளலிலே—உழ-தவழ—ஓரெழுத்தின்- ஒருஅக்ஷரத்தின்—வடிவு உற்ற-உருவம் உண்டாகிய—சீர்- சிறப்பினை—மான-ஒக்க—துவண்ட-நலிந்த—வினையாளர்ஆயினும்-கர்மிகளானாலும்—மால்-விஷ்ணு—வளர்-கண்வளரும்—விமானத்து-(சொன்ன) விமானத்தைஉடைய, வண்-யாணர்பொருந்திய—தலம்ஆம் - திருப்பதியாகிய—அரங்கம் வழியாவரினும்—சீரங்கமார்க்கமாய் வந்தபோதிலும்—மானத்து-பெருமைபொருந்திய—வண்டு அமர் - அளிகள்பொருந்திய—தார் அண்டர்-தொங்கல் (புனைந்திருக்கும்) நித்தியசூரிகள், ஆம்-ஆகும், பதம்-கதி—வாய்க்கும்-சித்திக்கும்.அங்கு-அசை—எ-று. (கூரு)

அங்காக் கைக்கேமங்கைக் கீந்தா னரங்க னவனிக்குவாய்
அங்காக் கைக்கேபசித் தானிற்க வேமுத்தி யாக்கித்துயர்
அங்காக் கைக்கேசிலர் வேறே தொழுவ ரருந்திரவிய்
அங்காக் கைக்கேதனத் தாடரு மோதிரு வன்றியிலே.

இ-ள். அம்-அழகிய—கா-கற்பகத்தருவை—மங்கைக்கு - சத்திய பாமைக்கு—கைக்கு ஈந்தான்-கரத்தில் அளித்தவன், அரங்கன்—,அவனிக்கு-உலகுக்கு—வாய்- திருவதரத்தை—அங்காக்கைக்கு - அண்ணுக்குமவ்வளவு—பசித்தான்-பசித்தவன்—நிற்க-அவனன்றியில்—சிலர்-அனேகர்—முத்தியாக்கி - நற்கதிஅளித்து—துயரங் காக்கைக்கு விபத்துகள் (வாராது) அளிக்க—வேறேதொழுவர்-புறந்தொழுவார்—சில்லனாதெய்வங்களைப் பணிவார் ❊ அருந்திரவியம்-கிடத்தற்கரிய ஆக்கத்தை—திருஅன்றியில்-இலட்சுமி அல்லாமல்—காக்கைக்கே தனத்தாள் - வாயசக் கொடியையுடையமூதேவி—தருமோ-கொடுப்பாளோ—எ-று. (கூசு)

அன்றே யடைய வுனக்கே யடிமையென் றாய்ந்துணர்ந்தார்
அன்றே யடையப் படுவா ருனையரங் காவனத்திய்
அன்றே யடைய யயில்வோ ருமீதறி யாரறிஞர்
அன்றே யடைபைம் புலனு லுநன்கில்லை யாங்கவர்க்கே.

இ-ள். அரங்கா—, அன்றே-(உலகில்ஜன்மித்த) போதே—அடைய-அடங்கலும்—தாமும்-தமதுடைமையும் ❊ உனக்கே—, அடிமையென்று-தாசத்துவம் பூண்டிருத்தலாய்—ஆய்ந்து- ஆராய்ந்து—உணர்ந்தார் அன்றே-அறிந்தவர் அல்லவா—உனை—, அடையப்படுவார்-சேருமவர்—வனத்து-கானில்—இயன்று-உறைந்து—எய்- (மரத்தில்) பொருந்திய —அடை-இலை- (முதலியவற்றை) —அயில்வோரும்-புசிப்பவரும்—ஈதறியார்- இதனை உணரகில்லாரெனில்—அறிஞர் அன்று-ஞானியர் அல்ல —அடை- காவலிலிடப்பட்ட—ஐம்புலனுலும்-பஞ்சேந்திரியங்களாலும், அவர்க்கு—, நன்கு-பயன், இல்லை—, ஆங்கு-அசை—எ-று. (கூஎ)

ஆங்கா ரமாமின்னைத் தோய்மார் பரங்க னளையினையுண்டு
ஆங்காரமானிலமுண்டாற்குத்தொண்டனிவ் வண்டத்தப்பால்
ஆங்கா ரமான்பகு திப்புறம் போயமு தாற்றிற்படிந்து
ஆங்கா ரமானடி காண்பே னவன்ற னருள்சிந்தித்தே.

இ-ள். ஆம்- நீர்(உண்ட)—கார் - கொண்டலினது—அம்ஆ-அழகு ஆக—சுந்தரம்போல ❊ மின்னை-பிராட்டியாரை—தோய்- படிந்திரு

க்கப்பெற்ற—மார்பு-வக்ஷஸ்தலமுடைய, அரங்கன்—, அலையினை-தத்தியை—உண்டாங்கு-புசித்ததுபோல—ஆர-(குறைபட்டவயிறு) நிரம்ப—மால்-பெரிய—நிலம்-புவனத்தையும்—உண்டார்க்கு-அமுதுசெய்தவர்க்கு—தொண்டன்-அடியன் ஆயினேன்—(ஆகையால்) இவ்அண்டத்தப்பால்-இந்த அண்டகோளகைக்கப்புறத்தில்—ஆங்காரமான்-(யான் எனதென்னும்) ஆங்காரமமகாரங்களையுடைய—பகுதிப்புறம்போய்-பிரகிருதியை விட்டுநீங்கி—அமுது ஆற்றில் படிந்து-விரசாநதியில்தோய்ந்து—ஆங்கு-அவ்விடத்தில்—ஆர்-எழுந்தருளிய—அம்மான்-சுவாமியினது—அடி-திருவடிகளை—அவன்தன் அருள்-அவனுடைய கருணையை—சிந்தித்து-தியானஞ்செய்து—காண்பேன்-தரிசிப்பேன்—எ-று. (௯௮)

சிந்தா குலமுய்யக் குன்றெடுத் தாய்தென் னரங்கசுற்றுஞ்
சிந்தா குலகம் படைத்தளித் தாய்நிலஞ் சென்றிரந்த
சிந்தா குலவுசெல் வந்தந்தை தாய்குரு தெய்வமுநீ
சிந்தா குலமடைந் தேனடி யேன்சென்மந் தீர்த்தருளே.

இ-ள். சிந்து-பரவிய—ஆகுலம்-ஆன்நிரை—உய்ய-உயிர்உற்றிருக்க—குன்றுஎடுத்தாய்-வெற்பெடுத்தவனே—தென் அரங்க-திருவரங்கமுடையாய்—சுற்றும்—, சிந்துஆகு-அம்பரம்ஆகிய—உலகம்-மேதினியை—படைத்து-சிருஷ்டித்து—அளித்தாய்-ரக்ஷித்தவனே—சென்று-(மாவலிபால்) எய்தி—நிலம்-(மூன்றடி) மண்ணை—இரந்த-ஏற்ற—சிந்தா-மாணிக்குறளனே—குலவு-பாராட்டததக்க, செல்வம்-சம்பத்தும்—தந்தை-பிதாவும்—தாய்-மாதாவும்—குரு-ஆசாரியரும்—தெய்வமும்-குலதேவதையும்—நீ-நீயே—சிந்தாகுலம் அடைந்தேன்-மனவியாகுலம்உற்றனன்—(ஆசையினால்) அடியேன்-தாசபூதனாகியஎனது—சென்மம்-பிறப்பை—தீர்த்து-ஒழித்து—அருள்-(இனிவராமல்) கிருபைசெய்—எ-று. (௯௯)

தீரத் தரங்கப் பவ்நோய் துடைத்தென்னைத் தேவரொடுந்
தீரத் தரங்கப் பணிகாப் பவைத்த செயலென்பதோர்
தீரத் தரங்க வபயமென் றார்க்குந் திரைப்பொன்னிசூழ்
தீரத் தரங்கன் சிலம்பார்ந் தசெய்ய திருவடியே.

இ-ள் அத்தர் அங்க-பிரமருத்திராதியர் (வாழும்) மேனியாய்—அபயம்-அடைக்கலம்—என்று-என்பதுபோல—ஆர்க்கும்-ஆரவாரிக்கும்—திரை-அலைகளையுடைய—பொன்னி-தென்திருக்காவேரியாறு—சூழ்-சூழ்ந்த—தீரத்து-வரம்பினையுடைய—அரங்கன்—,

சிலம்புஆர்ந்த-நூபுரம்அணிந்த—செய்ய-செந்தாமரைபோலும்—திருவடி-சிறப்புற்றபாதங்கள்—தரங்கம் - சாகரம்போலும்—பவநோய்-சென்மப்பிணியை—தீர-ஒழிய—துடைத்து - அரித்து—என்னை-அடியேனை—தேவரொடும்- நித்தியசூரிகளுடன்கூடி—நிரத்து-தைரியத்துடன்—அரங்கப்பணி- (மோக்ஷ) வீட்டின்வேலைகளை—காப்பவைத்த-பண்ணுவித்த—செயலென்பது - செய்கையினை—ஓர்தீர்-அறியுங்கள்—எ-று. (௱)

பணவா ளரவி னரங்கே சர்தாளிற் பருதிவளை
நிணவா ளஞ்சார்ங்கங் கதைதோ ளிற்சாத்தின னீணில்மேற்
குணவா ளராம்பட்டர்க் கேழேழ் பிறப்புங் குடியடியான்
மணவா ளதாசன் யமகவந் தாதி வனைந்தனனே.

இ-ள். பருதி-நேமி—வளை-பாஞ்சசன்னியம்—நிணம்-(மாற்றலரின்) நெய்தோய்ந்த—வாள்-நாந்தகம்—அம்-சுந்தரமான—சார்ங்கம்—,கதை-தண்டம்—தோளில்சாத்தினன்-(ஆகியபஞ்ச) சமுஸ்காரங்களையும்பெற்றவரும்—நீள்நிலம்மேல்-நெடும்புவியில், குணவாளர்ஆம்- நற்குணம்படைத்தவர்ஆகிய—பட்டர்க்கு—, ஏழேழ் பிறப்பும்குடிஅடியான்-பதினான்குதலைமுறைகளும் தொண்டுபட்டவரும்ஆகிய—மணவாளதாசன்- திவ்யகவிப்பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்என்பவர்—பணம் - (ஆயிரம் சிரங்களையுடைய—வாள்-ஒள்ளிய—அரவின்-திருவனந்தாழ்வானில் (கண்படுக்கும்)—அரங்கேசர்-திருவரங்கநாயகருடைய—தாளில்-திருவடியில்—யமகஅந்தாதி—,வனைந்தனன்-சூடினன்—எ-று. (க)

திருவரங்கத்தந்தாதிப்பிரதிபதம்

முற்றிற்று.

அழகியமணவாளதாசர் திருவடிகளேசரணம்.